விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 சுக்கில ஆண்டு பங்குனி மீ 16-ம் உ வியாழக்கிழமை (2) - 03 - 1990) ஹிஜ்ரி 1410றஜ்மான் 01 ஓசை 39

# பிரதமர் பதவியிலிருந்து டி. பி. ராஜினாமா!

## அமைச்சரவையும் பதவி துறந்தது; இன்று புதிய அமைச்சரவை

(கொழும்பு)

இலங்கை பிரதம மந்திரி திரு. டி. பி விஜயதுங்கா நேற்று நண்பகல் தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்தார். பிரதமர் ராஜினாமாச் செய்ததால் அமைச்சரவையும் கலைந்துவிட்டது.

இத்தகவலை நேற்றைய அமைச்சரவைக் கூடடத்தின் பின் அமைச்சரவைப் பேச்சாளரான திரு. ரஞ்சன் விஜேரத்தினா பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை பற்றிய விபரம் நாளை நண்பகல் அறிவிக்கப்படுமென்றும் திரு. ரஞ்சன் விஜேரத்தினா சொன்னார்.

பிரதம மந்திரியின் ராஜினாமா பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாஸ அறிவித்தார் என்றும் திரு. ரஞ்சன் சொன்னார்.

பத்திரிகையாளர்களின் சேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் திரு. டி பி. விஜயதுங்காவின் ராஜினாமாவுக்கு குறிப்பிட்ட காரணம் எதுவுமில்லை என்றும் திரு. ரஞ்சன் சொன்னார்.

ஒரு வருடகாலத்திற்கேதிரு. டி. பி, விஜயதுங்கா பிரதம மந்திரி பதவியை வகிப்பதற்குச் சம்மதித்திருந்தாரென்றும் ரஞ்சன் கூறினார்.

### கடத்தப்பட்ட பொலிஸ் தப்பி ஓடினார்

(கொழும்பு)

கண்டியில் ஜே. வி. பி யினரின் மறைவிடம் ஒன்றை படையினர் கண்டுபிடித்தனர். இதே வேளை ஜே.வி.பி. யால் கடத்தப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அங்கிருந்து தப்பிவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நித்தம்புவ வவுல்கலயில் இடம்பெற்ற பன்னிருவர் படுகொலைகள் தொடர்பாக ஐநூறுக்கும்மேற்பட்டவர்கள்

### விஜயபால மென்டிஸ் புதிய பிரதம மந்திரி ?

(கொழும்பு)

புதிய பிரதம மந்திரியாக முன்னாள் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. விஜயபால மென்டிஸ்நியமிக்கப்படலாமென்று அரசியல்

காவே மீண்டும் பிரதம மந்திரியாக நியமிக்கப்படலாமென்று சில பகுதிகளில் வெளிவந்த ஹேஸ்யங்கள் அடிபட்ட போதிலும் ஆளும் கட்சிக்கு

### ஈழவர் முன்னணி புதிய எம், பி.

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் ஈழவர் ஜனநாயக முன்னணியின் புதிய எம். பியாக திரு, எஸ் தில்லைநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான சிபார்சுக் கடிதத்தை ஈழவர் முன்னணி அனுப்பி வைத்திருக்கிறது. ஈழவர் முன்னணியின் ஈரோஸ் இயக்க ஸ்தாபகர்களில் ஒருவரும் யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் முதலாவதாகத் தெரிவு செய்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கெய்ரோவில் பிரமிட் கண்டுபிடிப்பு

(கெய்ரோ)

கெய்ரோவில் பிரெஞ்சு தொல் பொருளியல் ஆய்வாளர்கள் சுமார் 4300 ஆண்டுகளுக்குமுன் பழமை வாய்ந்த புதிய பிரமிட்டு ஒன்றை கண்டுபிடித்துள்ளனர். கெய்ரோவில் மேற்கு நகர்ப் பகுதியான இசாமில் உள்ள தொன்மை வாய்ந்த மெம்சி அருகே இந்த பிரமிட்டு கண்டு எடுக்கப்பட்டதாக இசாமில் தொல்பொருளியல் இயக்குனர் தெரிவித்தார்.

### இளம் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)


நல்லூர் கச்சேரி வீதியிலுள்ள 12 வயது சமலதா என்னும் இளம்பெண் அலரிக்

# ஹமீத் - புலிகள் சந்திப்பு

# பலாலியில் உடன்பாடு!

## முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு

- வல்வெட்டித்துறை இராணுவமுகாம் 48 மணி நேரத்தில் மூடப்படும்.
- காரைநகர் கடற்படைத் தளம் விஸ்தரிக்கப்படமாட்டாது.
- நயினாதீவு படகுச்சேவையில் சோதனை நடவடிக்கை நிறுத்தப்படும். கோயில் இறங்குதுறையை பாவிக்கலாம்,
- பலாலி இராணுவம் விஸ்தரிக்கப்படமாட்டாது: விமான நிலையம் சர்வதேச தரத்துக்கு உயர்த்தப்படும்.
- பலாலியிலும் யாழ். கோட்டையிலும் இராணுவம் தங்கியிருக்கும்.



நேற்று பலாலியில் அரசதரப்புடன் புலிகள் நடத்திய பேச்சுக்களில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் புலிகளின் பிரதிநிதிகள்.

வடக்குக்கிழக்கு மாகாண சமாதானக் குழுத்தலைவரும் உயர்கல்வி விஞ்ஞான அமைச்சருமான ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீத் நேற்று யாழ்ப்பாணம் வந்து விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போது மேற்கண்ட ஐந்து முக்கிய அம்சங்களில் உடன்பாடு ஏற்பட்டது.

யாழ்ப்பாணக்குடா நாட்டில் எழுந்துள்ள சில பாதுகாப்புப் பிரச்சினைகள் சம்பந்தமாக விடுதலைப் புலிப் பிரமுகர்களுக்கும் இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இதில் அரசதரப்பில் சமாதானக்குழுத்தலைவரும் உயர் கல்வி விஞ்ஞான அமைச்சருமான ஏ. ஸி. எஸ் ஹமீத்; முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா, லெப். ஜெனரல் வனசிங்கா வைஸ்அட்மிரல் எம் ஏ. சில்வா வடமத்திய வடகிழக்கு இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர். விடுதலைப்புலிகள சார்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக், யாழ் மாவட்ட இராணுவத் தளபதி பானு கட்சி அமைப்பாளர் ராஜன், தீவுப்பகுதி இராணுவப் பொறுப்பாளர் ஜேம்ஸ் உட்பட மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

## இருதரப்பும் மோதா வகையில்

இத்தகவலை நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தின் பின் அமைச்சரவைப் பேச்சாளரான திரு. ரஞ்சன் விஜேரத்தினா பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை பற்றிய விபரம் நாளை நண்பகல் அறிவிக்கப்படுமென்றும் திரு. ரஞ்சன் விஜேரத்தினா சொன்னார்.

பிரதம மந்திரியின் ராஜினாமா பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாஸ அறிவித்தார் என்றும் திரு. ரஞ்சன் சொன்னார்.

பத்திரிகையாளர்களின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் திரு. டி பி. விஜயதுங்காவின் ராஜினாமாவுக்கு குறிப்பிட்ட காரணம் எதுவுமில்லை என்றும் திரு. ரஞ்சன் சொன்னார்.

ஒரு வருடகாலத்திற்கே திரு, டி. பி, விஜயதுங்கா பிரதம மந்திரி பதவியை வகிப்பதற்குச் சம்மதித்திருந்தாரென்றும் ரஞ்சன் கூறினார்.

(கெய்ரோ)

கெய்ரோவில் பிரெஞ்சு தொல் பொருளியல் ஆய்வாளர்கள் சுமார் 4300 ஆண்டுகளுக்குமுன் பழமை வாய்ந்த புதிய பிரமிட்டு ஒன்றை கண்டுபிடித்துள்ளனர். கெய்ரோவில் மேற்கு நகர்ப் பகுதியான இசாமில் உள்ள தொன்மை வாய்ந்த மெம்பி அருகே இந்த பிரமிட்டு கண்டு எடுக்கப்பட்டதாக இசாமில் தொல் பொருளியல் இயக்குனர் தெரிவித்தார்.

# இருதரப்பும் மோதா வகையில் இணக்கம் காணப்பட்டது

வடக்குக்கிழக்கு மாகாண சமாதானக் குழுத்தலைவரும் உயர்கல்வி விஞ்ஞான அமைச்சருமான ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீத் நேற்று யாழ்ப்பாணம் வந்து விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போது மேற்கண்ட ஐந்து முக்கிய அம்சங்களில் உடன்பாடு ஏற்பட்டது.

யாழ்ப்பாணக்குடா நாட்டில் எழுந்துள்ள சில பாதுகாப்புப் பிரச்சினைகள் சம்பந்தமாக விடுதலைப் புலிப் பிரமுகர்களுக்கும் இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இதில் அரசதரப்பில் சமாதானக்குழுத்தலைவரும் உயர் கல்வி விஞ்ஞான அமைச்சருமான ஏ. ஸி. எஸ் ஹமீத்; முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா, லெப். ஜெனரல் வனசிங்கா வைஸ்அட்மிரல் எம் ஏ. சில்வா வடமத்திய வடகிழக்கு இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர். விடுதலைப்புலிகள சார்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக், யாழ் மாவட்ட இராணுவத் தளபதி பானு கட்சி அமைப்பாளர் ராஜன், தீவுப்பகுதி இராணுவப் பொறுப்பாளர் ஜேம்ஸ் உட்பட மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

இப்பேச்சுவார்த்தைகளில் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளுக்குமிடையில் மோதல் ஏற்படாத வகையிலும் சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படாத முறையிலும் இணக்கம் காணப்பட்டது.

நயினாதீவுப் பிரயாணிகள் படகுகளை சோதனை இடுவதை நிறுத்துமாறு பேச்சுவார்த்தையில் கூறப்பட்ட யோசனையை அரசாங்க தரப்பு ஏற்றுக்கொண்டது. நயினாதீவு இறங்குதுறையை எவ்வித சிரமமின்றியும் உபயோகித்துக்கொள்ளலாமென்றும் அரசு தரப்பு உறுதியளித்தது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட பொலிஸ் தப்பி ஓடினார்

(கொழும்பு)

கண்டியில் ஜே. வி. பி யினரின் மறைவிடம் ஒன்றை படையினர் கண்டுபிடித்தனர். இதே வேளை ஜே.வி.பி. யால் கடத்தப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அங்கிருந்து தப்பி வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நித்தம்புவ வவுல்கலயில் இடம்பெற்ற பன்னிருவர் படுகொலைகள் தொடர்பாக ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் புலனாய்வுப் பகுதியினரால் விசாரிக்கப்பட்டனர்.

# விஜயபால மென்டிஸ் புதிய பிரதம மந்திரி?

(கொழும்பு)

புதிய பிரதம மந்திரியாக முன்னாள் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. விஜயபால மென்டிஸ் நியமிக்கப்படலாமென்று அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது. திரு. டி. பி. விஜயதுங்காவே மீண்டும் பிரதம மந்திரியாக நியமிக்கப்படலாமென்று சில பகுதிகளில் வெளிவந்த ஹேஸ்யங்கள் அடிபட்டபோதிலும் ஆளும் கட்சிக்கு நெருங்கிய வட்டாரங்கள் இதை நிராகரித்தன. இதே சமயம் ஜனாப் ஏ ஸி எஸ். ஹமீது பிரதம மந்திரியாக நியமிக்கப்படலாமெனவும் வதந்திகள் அடிபட்டது குறிப்பிடத்தக்கது

அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் மிகப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இளம் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கச்சேரி வீதியிலுள்ள 12 வயது சமலதா என்னும் இளம்பெண் அலரிக் கொட்டையை உண்டு மரணமானார். தாயாருக்கும் மகளுக்கும் இடையில் ஏற்பட்ட சிறு பிரச்சினையே இத் தற்கொலைக்குக் காரணம் எனத் தெரியவருகின்றது. இதனை விசாரணை செய்த மரண விசாரணை அதிகாரி எஸ். எஸ், பிரான்சிஸ் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# ஆங்கிலத்தில் சித்தி பெற்றோர் தொகை மிகக் குறைவு

(கொழும்பு)

கடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்தோர் தொகை குறைந்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்

க. பொ. த. சாதாரண பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி பெற்றவர்களுள் ஒரு சிறு தொகையினரே உயர்தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கு தோற்றினார்கள்.

திறமையான மாணவர்கள் தோற்றியும் சித்தியடைந்தோர் மிகவும் குறைவு என

(6ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாநகரசபைப் பகுதி புனரமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மிக விரைவில் யாழ். மாநகரப்பகுதி புதுப்பொலிவுடன் திகழவுள்ளது. கடந்தகால அமைதியின்மையால் பாதிக்கப்பட்டிருந்த மாநகரசபைப் பகுதி மீண்டும் புனரமைக்கப்படவுள்ளது.

யாழ் மாநகரசபையின் சேதமாகிய பழைய கட்டிடத்தின் தென்பகுதியில் கடற்கரையை அண்டிய பகுதியில் உள்ள பத்துப்பரப்புக் காணி ஒரு மினிகடற்கரையாக மாற்றப்படவுள்ளது. இதில் பல வசதிகளும் செய்யப்படுமென மாநகரசபை ஆணையாளர் தெரிவிக்கிறார்.

மேலும் தமது சில திட்டங்களை அவர் விபரிக்கும் போது யாழ். மாநகர எல்லைக்குள் மரம் விஸ்தரிப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட இருப்பதுடன் ஏற்கனவே நிற்கும் மரங்களை பாதுகாக்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிரபா எப்போது வருவார்?

(ஒட்டுசுட்டான்)

தலைவர் பிரபாகரன் வெகுவிரைவில் வெளியே வருவார். மக்களையும் பத்திரிகையாளர்களையும் சந்திப்பார். பாதுகாப்புக் கருதிப் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்வது நிச்சயம் இல்லை''.

இத்தகவலைவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகரத்தினம் யோகி நேற்று ஒட்டுசுட்டானில் நினைவுத் தூபித் திறப்பு வைபவத்தில்பேசுகையில் தெரிவித்தார்.

# ஆயுதம் ஒப்படைப்பு பேச்சுக்கே இடமில்லை!

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டானில் யோகி

ஆயுதங்களைஒப்படைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை இந்திய இராணுவத்துக்கு எதிராக மட்டும் நாம் ஆயுதம் ஏந்தவில்லை. இலங்கைப் பேரினவாத அரச படைகளுக்கெதிராகவும் நாம் ஆயுதம் ஏந்தினோம். இதுமட்டுமல்ல

(6ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர்களை

# இந்தியாவில் இருந்து அனுப்ப ஏற்றசூழ்நிலையை உருவாக்குக

(புதுடில்லி)

தமிழ் நாட்டிலும் ஒரிஸ்ஸாவிலும் தற்பொழுது தங்கியுள்ள 9000 பேர் மிகவும் விரைவாக தாயகம் திரும்பிச் செல்வதற்கு, தேவையான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வீடற்றோருக்கு உதவிவழங்கதிட்டம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஐந்தவருடங்களில் 15 லடசம் வீடு அமைத்தல் திட்டத்தின்கீழ் குறைந்த வருமானமுடையோருக்கும் வீடற்றவர்களுக்கும் நிதிஉதவி வழங்கப்பட உள்ளது. இந் நிதியை மக்கள் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள வீடுகளைத் திருத்தவோ அன்றி புதிதாக ஒரு வீட்டை அமைக்கவோ அல்லது ஏற்கனவே உள்ள வீடுகளுக்கு மேலதிக வசதிகளைச் செய்துகொள்ளவோ பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இதுசம்பந்தமாக விரைவில் பொது மக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட உள்ளன. இவ் விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியவர்களின் அடிப்படையில் உதவி நிதி வழங்கப்பட உள்ளது என வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில் அண்மையில் விண்ணப்பங்களைக் கோருவது சம்பந்தமான உத்தரவு கிடைக்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# முடிவுத்திகதி இல்லாத போக்குவரத்துச்சபை விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதன் டிப்போக்களுக்கு தனியார் பாதுகாப்புச் சேவைகளை ஆரம்பிக்க பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்திருந்தது.

ஆனால் இந்தப் பாதுகாப்பு சேவைக்கு விண்ணப்பிக்கும் முடிவுக்திகதி எதுவும் அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்படவில்லை.

இது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட சில தனியார் பாதுகாப்புச் சேவை நிறுவனங்கள், இந்த விளம்பரத்தின்படி சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் சென்று விபரங்களைக் கேட்டவுடன் விண்ணப்பங்கள் முடிந்துவிட்டதாகவும் இது குறித்து முடிவும் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வாகனவரி

# முப்பதாம் திகதிக்குப் பிந்தினால் தண்டம் செலுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வாகன வரியை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன் செலுத்தாதார் காலக்கெடு முடிந்த பின்னர் தமது வரிப்பணத்துடன் அவ்வரியில் 10% தண்டப் பணமும் செலுத்தப்பட வேண்டும். இச்சலுகையும் வரும் ஜூன்மாத இறுதிவரையே நடைமுறையில் இருக்கும், ஜூன்மாத இறுதியின் பின் இத்தண்டப்பணம் 20% மாக அதிகரிக்கப்படும் என செயலக வாகனவரிப்பகுதி அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகிறது.

# பிறப்புஇறப்புசான்றிதழ்கள் வழங்க துரித ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக பதிவாளர் அலுவலகத்தில் தேங்கிக்கிடக்கும் சுமார் முப்பதாயிரம் பிறப்பு, இறப்பு விண்ணப்பங்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய மேலதிக பதிவாளர் திரு. ஏ. பொன்னம்பலம் எடுத்த துரித நடவடிக்கையால் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் இவை மேற் கொள்ளப் படுகின்றன.

இவற்றின் வேலைகள் ஓரளவு முடியும் வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதும் இடைநிறுத்தப் பட்டுள்ளது.

போட்டஸ்ரற் இயந்திரங்கள் பழுதாகிய போதிலும் எழுதியே பத்திரங்கள் நிரப்பப்படுகின்றன. 1954 ஆம் ஆண்டுக்குபின் பிறந்தவர்களுக்கான பத்திரங்களும் கொழும்பிலிருந்து வந்துள்ளன.

காலதாமதமின்றி மக்கள் பிறப்பு, இறப்பு பத்திரங்களைப் பெறவும், மோசடிகள் இடம் பெறாமல் பார்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

## வரிவிளம்பரம்

### விருப்பசேவைக்கு

அப்பளம் தயாரிப்பாளர்களுக்கு ஏற்ற வகையில் தயாரிகப்பட்ட ‘ உழுந்து மா, கிலோ 22/- படி பெற்றுக் கொள்ளலாம். M.G.M., No·777 K.K.S Rd, Jaffna.

வரலாறு ஆண்டு 6 ஆண்டு 7 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப் படுத்தப் படுகின்றது பாடத்திட்டத்தை தழுவி எழுதப்பட்டது ஆக்கம் ஆலோசனை எம் எஸ் அப்துல் ரஹீம் தி. கமலநாதன். B 362

### சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும் உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரதங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் கட்டிகள் தாச்சிச் சட்டிகள் றேகள் சோஸ்பான்கள்பொரியல் சட்டிகள் டின்னர் செற்கள் ரீ செற்கள் கோவிற்சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம்.
RAJZ BRAND பார்வை அறை S A தேவதாசன் சூறாவத்தை சுன்னாகம்.
(B 414)

### திருமண சேவை நிலையம்

பரமேஸ் கோணேஸின் பின்னணிப் பாடகர் ‘வின்ரோ மகேந்திரா’ ஆரம்பிக்கும் மெல்லிசைக் குழுவுக்கு பெண் பாடகிகள், Lead Guitor Flute, Violin வாத்தியக் கருவிகள் மீட்டுவதில் திறமையுள்ளவர்கள் உடன் தேவை. திருமண சேவை நிலையம், 6 நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணம். (B/308


### பாதை சீர் திருத்தம்

(அட்டாளைச்சேனை)

மட்டக்களப்பு பொத்துவில் கொழும்புப் பாதை சீர் திருத்தம் செய்யப்படவிருக்கின்றது இதற்கான ஆரம்ப வேலைகளை கல்முனை வீதிப் போக்குவரத்துத் திணைக்களத்தால் மேற்கெள்ளப் படுகிறது.

# குற்றச்செயல்களைத் தடுக்கவும் விசாரிக்கவும் சமாதான சபை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நடைபெறும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கும், அது சம்பந்தமான விசாரணைகளை நடாத்துவதற்காகவும், கிளிநொச்சியில் ஒரு சமாதான சபை அமைக்கப்பட்டுள்ளது.

இச்சமாதான சபை கிளிநொச்சி, கண்டி வீதியின் மேற்குப் புறமாக உள்ள பகுதியில் வசிக்கும் மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கே ஆனையிறவையும், தெற்கே முருகண்டியையும் உள்ளடக்கிய இப்பகுதிக்குள்உமையாள்புரம், பரந்தன் குஞ்சுப்பரந்தன், உருத்திரபுரம். எள்ளுக்காடு, சிவநகர், ஜெயந்தி நகர். கணேசபுரம், திருநகர், கனகபுரம், செல்வா நகர், முறிப்பு, பாரதிபுரம், பொன்னகர், செல்வபுரம், திருமுருகண்டி ஆகிய கிராமங்கள் அடங்குகின்றன.

இக்கிராமங்களில் வசிக்கும் மக்கள் தமது புகார்களைக் கிளிநொச்சி பஸ் நிலையத்திலுள்ள மக்கள் குரல் பணிமனையில் ஒப்படைக்கும்படி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(49)

# தீவுப்பகுதி ஆசிரியர்கள் தீவகத்தில் பணி புரிய வேண்டும்

தீவுப்பகுதியை பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர்கள் தீவுப்பகுதி மாணவர்களின் நன்மை கருதி இப்பகுதி பாடசாலைகளில் வந்து கடைமையாற்றும் படி இப்பகுதி மக்களால் கோரிக்கை விடப்படுகின்றது.

யாழ். நகரில் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களில் பத்து வீதத்திற்கும் அதிகமானோர் தீவகத்தைச் சார்ந்தவர்களே இவர்களில் எட்டு வீதத்தினர் தீவகத்தில் ஆசிரியர்களாகப் ணிபுரிய நியமிக்கபப்டட்வர்பகள்.

இவர்கள் தமது வசதி கருதி யாழ். நகருக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டனர். தீவகமாணவர்களின்முன்னேற்றமும், நன்மையும் கருத்தில் கொண்டு இவர்களது பணி எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுசம்பந்தமான வேண்டுகோளொன்றை வேலணை உதவி ல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் விடுத்துள்ளார். தீவக அபிவிருத்திச் சபை போன்றவையும் இவற்றிற்கு உதவி செய்ய வேண்டுமெனவும் தீவக மக்கள் கேட்கிறார்கள். (15)

# ஆதீனத்தில் விபுலானந்தர் விழா

(நல்லூர்)

நாளை மாலை 3.மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் சுவாமி விபுலானந்தர் ஜனனதின விழா நடைபெறவுள்ளது. இவ்விழா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலமை வகிக்கிறார். வரவேற்புரையை வே. கெ. தனபாலனும் சிறப்புரையை கலாநிதி. ப. கோபால கிருஷ்ணனும் பேருரையை சைவப் புலவர் கா.சி குலரத்தினம் நிகழ்த்துவார்கள் நன்றியுரையினை இ. தவகோபால் நிகழ்த்துவார் இவ்விழாவினை யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஒழுங்கு செய்துள்ளது.

# நாய் கடித்து பெண்மணி மரணம்!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியைச் சேர்ந்த முத்தையா வள்ளியம்மை என்ற 56 வயது பெண்மணி நாய் கடித்து மரணமானார்.

இவர் தடுப்பூசி எதுவும் செலுத்தாத காரணத்தால் ஏற்புவலி ஏற்பட்டு மரணமானதாக மரணவிசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர். (லோ )

# தமிழ் மொழித்தினப் போட்டி யாழ்.தெற்குகொத்தணி முதலிடம்

(விசேட நிருபர்)

1990 ஆம் ஆண்டு தமிழ் மொழித் தினப் போட்டிகளில் யாழ். தெற்கு கொத்தணி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

தெரிவு செய்யப்பட்ட கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையில் யாழ். கொத்தணி மட்டத்தில் கடந்த 25 ஆம் திகதி யாழ். மகளிர் கல்லூரியில் போட்டிகள் நடத்தப்பட்டன.

யாழ். தெற்குக் கொத்தணி கலந்து கொண்ட சகல போட்டிகளிலும் திறமை சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டது

போட்டிகளும் சுவீகரித்துக் கொண்ட இடங்களும் பின்வருமாறு.

நடனம் 3 ஆம் பிரிவு முதலாம் இடம் பாஓதல் 1 ஆம் 2 ஆம் பிரிவுகளில் முதலிடம். பல்லியம் 2 ஆம் பிரிவில் 1 ஆம் இடம். இரண்டாம் பிரிவு நடனம் 2 ஆம் இடம். இசைப்பாடல் (தனி) 2 ஆம் பிரிவு இரண்டாமிடம் 2 ஆம் பிரிவு குழு இசைப் பாட்டு 3 ஆம் இடம். 3 ஆம் பிரிவு பேச்சு மூன்றாம் இடம் ஆக்கம் இரண்டாம் பிரிவு 3 ஆம் இடம்.

யாழ். தெற்கு கொத்தணி அதிபராக திரு ஜி பி அல்பிரட் தமிழ்த்தினக் குழுச் செயலாளராக ஆசிரியர் எஸ். எஸ். தங்கராஜா ஆகியோர் விளங்குகின்றனர். (21)

# மா பாண், விலை அதிகரிப்பு

(கொழும்பு)

கோதுமை மா, பாண் ஆகியவற்றின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது என உணவுத்திணைக்களம்அறிவித்துள்ளது.

இதன்படி ஒரு கிலே மாவின் விலை90 சதத்தாலும் பாணின் விலை 30 சதத்தாலும் அதிகரிக்கப் பட்டிள்ளது.

புதிய மாவின் விலை13ரூபா 15 சதம் எனவும், பாணின் புதிய விலை 4 ரூபா 90 சதம் எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது


## யாழ் நகரில் இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10·30 2.30 6.30
**BOBBY**
(உருது)
இனிய பாடல்களுடன் கூடிய காதல் காவியம்

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்’
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

லிடோ (யாழ்)
75வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

128வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

வியாபாரம் பெருக விளபரம் செய்க

## ராஜா வெண்திரை (யாழ்நகர்)

# ராஜாதி ராஜா

(ஈஸ்மன் கலர்)

29 - 3- 90 இன்று 100 வது நாளை குதூகலமாகக் கொண்டாடுகின்றான்

தினசரி: 10.30, 2.30, 6.30 காண்பிக்கப்டுகிறது

(B/444)

# சியானாஸ்

## திறப்பு விழா

இடம்: 77, கஸ்தூ யார் வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: மாலை 6.20 மணிக்கு

திகதி: 29 - 3 - 1990

இப் புதிய ஸ்தாபனத்தில் றெடிமேட் ஆடைகள், சிறுவர்களுக்கான சூட் வகைகள், டெனிம் ரவுசர், மாட்டின் சேட் மற்றும் நவீன வகை ஆடைகள் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## சியானாஸ் ஸ்தாபனத்தார்

(B/454)

மக்கள் வங்கி

மகேந்திரா' ஆரம்பிக்கும் மெல்லிசைக் குழுவுக்கு பெண் பாடகிகள், Lead Guitor Flute, Violin வாத்தியக் கருவிகள் மீட்டுவதில் திறமையுள்ளவர்கள் உடன் தேவை. திருமண சேவை நிலையம், 6 நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணம். (B/308

### பாதை சீர் திருத்தம்

(அட்டாளைச்சேனை)

மட்டக்களப்பு பொத்துவில் கொழும்புப் பாதை சீர் திருத்தம் செய்யப்பட விருக்கின்றது இதற்கான ஆரம்ப வேலைகளை கல்முனை வீதிப் போக்குவரத்துத் திணைக்களத்தால் மேற்கொள்ளப் படுகிறது.


## ராஜாதி ராஜா

(ஈஸ்மன் கலர்)

**29 - 3 - 90 இன்று 100 வது நாளை குதூகலமாகக் கொண்டாடுகின்றான்**

தினசரி: 10.30, 2.30, 6.30 காண்பிக்கப்படுகிறது

(B/444)

இப் புதிய ஸ்தாபனத்தில் றெடிமேட் ஆடைகள், சிறுவர்களுக்கான சூட் வகைகள், டெனிம் ரவுசர், மாட்டின் சேட் மற்றும் நவீன வகை ஆடைகள் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## சியானாஸ் ஸ்தாபனத்தார்

(B/454)

128வது நாளை நோக்கி அரங்கு நிறைந்த காட்சிகள்

**வெலிங்டன் (யாழ்)**

தினசரி

10. 30, 2. 30 6. 30

★ கார்த்திக் ★ குஷ்பு

**வருஷம் 16**

(கலர்)

வியாபாரம் பெருக
விளபரம் செய்க

புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

# கணேசன் ஸ்ரோர்ஸ்

201, கே. கே. எஸ். றோட் யாழ்ப்பாணம்.

**யாழ்நகரில் தரம்மிக்க ஜவுளி வகைகளை எண்ணம்போல் தேர்ந்தெடுக்க**

வருக, வருக என வரவேற்கிறோம்

## முகூர்த்தப் பட்டுப்புடவைகட்கு

**சிறந்த ஸ்தாபனம்**

**KANESAN STORES**

201, K. K. S. ROAD JAFFNA.

T. PHONE: 24025

(B-452)


### மக்கள் வங்கி

# அடகு நகைகள் மீளளித்தல்

### யாழ்ப்பாண மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்து, மீளப் பெறுவதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அருகில் இருக்கின்ற பொலிஸ் தொடர் மாடிக் கட்டிடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. ஊர்காவற்றுறைக் கிளை | (22-09-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு | 29-3-90 | வியாழன் |
| 2. பருத்தித்துறை கிளை | (15-09-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29-3-90 | வியாழன் |
| 3. வல்வெட்டித்துறைக் கிளை | (13-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29-03-90<br>30-03-90 | வியாழன்<br>வெள்ளி |
| 4. நெல்லியடிக் கிளை | (15-09-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 30-3-90<br>31-3-90 | வெள்ளி<br>சனி |
| 5. சுன்னகாம் கிளை | (9-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 30-3-90<br>31-3-90 | வெள்ளி<br>சனி |
| 6. காங்கேசன்துறைக் கிளை | 22-9-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 31-3-90 | சனி |

மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8. 30 மணி தொடக்கம் நண்பகல் 1. 00 மணி வரை அடகு நகைகள் மீளளிக்கப்படும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமுகந்தந்து நகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மற்றைய கிளைகளின் நகைகள் சித்திரை 3ஆம் திகதி முதல் மீளளிக்கப்படும். அது பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப் படும்.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி. யாழ்ப்பாணம்.
(B/431)

# லித்வேனிய விவகாரத்தில் அமெரிக்கா தலையிடுவதற்கு சோவியத் கண்டனம்

## "எமது உள்விவகாரத்தில் நீங்கள் தலையிடவேண்டாம்"

(மொஸ்கோ)

லித்வேனியா சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவது உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகவே உள்ளது என்று சோவியத் யூனியன் வன்மையாகக் கண்டித்துள்ளது.

அமெரிக்கா இதில் இங்கு ஒன்றும் அங்கொன்றுமாக இரட்டைவேடம் போட்டு செயற்படுவதாகவும் சோவியத் யூனியன் குற்றம் சாட்டியுள்ளது.

லித்வேனியா பற்றி கடந்த வாரம் அமெரிக்க செனற்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை யடுத்தே சோவியத் யூனியன் இவ்வாறு தெரிவித்துள்ளது.

லித்வேனியாவில் படைபலத்துக்கு எதிராக அமெரிக்கா விடுத்துள்ள எச்சரிக்கை ஏற்கனவே வெடித்துள்ள நிலையை மேலும் வெடிக்கச் செய்வதற்கான அபாயத்தை ஏற்படுத்தியிருப்பதாக சோவியத் வெளியுறவு அதிகாரி ஒருவர் கூறினார்.

சோவியத் யூனியன் லித்வேனியாவில் மேற்கொண்டுள்ள நடவடிக்கை சரியான முடிவு என்றும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவே ஏற்படுத்தப்பட்டது என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

லித்வேனியா நிலைமை குறித்து அமெரிக்கா மீண்டும் கவலை தெரிவித்துள்ளது.

இதேவேளை லித்வேனியா இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களை சோவியத் யூனியன் இராணுவம் கைது செய்த சம்பவத்துக்கு அமெரிக்கா எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை.

---

### யாசீர் அரபாத்துக்கு சர்வ தேச விருது

(புதுடில்லி)

பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசீர் அராபாத்துக்கு சர்வதேச பிரிவுணர்வுக்கான ஜவர்லால் நேரு விருது வழங்கப்பட்டது.

இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கடராமன் இந்த விருதினை அவருக்கு வழங்கினார்.

கல்கத்தா சென்ற யாசீர் அரபாத்துக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

---

## விருந்து உபசாரத்தை நிறுத்தவேண்டும்!

(கொழும்பு)

சில கூட்டுத்தாபனங்களும், நிறுவனங்களும் பிரமுகர்களுக்கு ஹோட்டல்களில் பெரும் செலவுடன் விருந்துபசாரங்களை நடாத்துவதை நிறுத்த வேண்டுமென ஜனாதிபதி பணித்துள்ளார்.

சகல மட்டங்களில் ஒழுங்குமுறை பேணப்பட வேண்டும் எனவும், அரசாங்க ஏற்பாட்டில் இடம்பெறும் வைபவங்களில் மதுபானம் வழங்குவதை அரசு முன்னர் தடை செய்தது என்றும், அது மீறப்படக்கூடாது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

---

## மூதூர் டிப்போவில் பஸ் பற்றாக்குறை

(மூதூர்)

மூதூர் பகுதியில் பஸ் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பஸ் டிப்போவில் உள்ள ஐந்து பஸ் வண்டிகளில் இரண்டு தினமும் பழுதடைகின்றன.

இதனால் மூன்று பஸ் வண்டிகள் சேவையாற்றியும், பொதுமக்களும் குறிப்பாக பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளும் பெரும் கஷ்டத்தினை எதிர்நோக்குகின்றனர்.

---

### பாண்டியன்குள ம.வி. மெய்வல்லுநர்போட்டி

மேற்படிப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர்ப் போட்டி 23.3.90 அன்று பாடசாலை அதிபரும், கொத்தணிஅதிபருமான திரு. மு. திருஞானம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டிகளுக்கு முல்லை. மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி ஜனாப் அகமட் கான் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் பரிசில்களை வழங்கிச் சிறப்பித்தார். இப்போட்டியில் சேரன் இல்லம் முதலாம் இடத்தைப்பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

---

### வீதியை திருத்துமாறு வேண்டுகோள்

(தீவுப்பகுதி)

மண்டை தீவையும் அல்லைப்பிட்டியையும் இணைக்கும் முக்கிய வீதி வாகனப் போக்குவரத்திற்கேற்றவாறு திருத்தி அமைக்க வேண்டும் என்றும் வேலணைக் கோட்டகல்வி அலுவலக கல்வி அதிகாரிகள் டுவித்துள்ளனர்.

தீவுப்பகுதி தெற்கு (வேலணை) உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற திட்டக்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு வேண்டுகோள் தெரிவிக்கப்பட்டது. (15)

---

## மூதூர் அபிவிருத்தி பற்றி பேச்சு வார்த்தை

(திருக்கோணமலை)

மூதூர் பகுதியை அபிவிருத்தி செய்வது தொடர்பாக மூதூர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கும் இங்குள்ள சர்வோதயம், முஸ்லிம் இளைஞர் சங்கம், திருமலை மாவட்ட அபிவிருத்திச் சங்கம், திருமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் என்பவற்றுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

மூதூர் ஞானப்பிரகாசம் மண்டபத்தில் நேற்று முந்தினம் இது நடைபெற்றது.

அபிவிருத்தித் திட்டம், மக்களின் வேலைத் திட்டம் என்பனபற்றியும் ஆராயப்பட்டது.

---

## இலங்கை வங்கியின் புதிய நிதி மாற்று முறை

(கொழும்பு)

இலங்கை வங்கி கண்டதும் கொடுப்பனவுக் கட்டளை என்ற புதிய நிதிமாற்று

கண்டதும் கொடுப்பனவுக் கட்டளைகள் ஆயிரம் ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரை விநியோகிக்கப்படும். ஒவ்

---

எழுத்தாளர் டானியல்

## கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்க வேண்டும்

(கொழும்பு)

நிதிப்பட்டம் வழங்கியதைப்

---

### இறைச்சிக் கடைகள் மீது கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரப் பகுதியில் உள்ள இறைச்சிக்கடைகள் ஏப்பிரல் மாதம் முதல் திகதியில் இருந்து சுகாதார கட்டுப்பாடுகளுக்குட்படுத்தப்படும் என யாழ். மாநகர அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் விளக்கும் போது இறைச்சியடிக்கப்படும் மிருகங்கள் கொல்களத்தில் இருபத்தி நான்குமணி நேரம் உயிருடன் வைக்கப்பட்டிருப்பதுடன் இறைச்சியாக்கப்பட்ட மிருகங்கள் சீல் குத்தப்பட்டபின்னரே விற்பனைக்கு விடப்படும் எனவும் தெரிவித்தார்.

இதுதவிர சட்டவிரேதமாக அமைக்கப்பட்டுள்ள மினி இறைச்சிக் கடைகள் யாவும் அகற்றப்படுவதுடன் தகுதியுடையவை நகரசந்தைப் பகுதிக்கு மாற்றப்படும் எனவும் தெரிவித்தார். (லோ)

---

### வேளாண்மை வெள்ளத்தினால் பாதிப்பு

(அட்டாளைச்சேனை)

தொடர்ந்து மூன்று நாட்களாகப் பெய்த மழையின் காரணத்தால் வெள்ளம் ஏற்பட்டு நிந்தாவூர், ஒலுவில் பிரதேச வேளாண்மைகள் நீரில் மூழ்கிப் பெரும் நஸ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. (46)

---

## மின்கம்பத்துடன் பஸ்மோதி 70 பயணிகள் கருகி மரணம்

(கல்கத்தா)

இந்தியாவின் மாநிலமான மேற்கு வங்காளத்தில் நடைபெற்ற பஸ் விபத்தொன்றில் மின்சாரம் தாக்கி 70 பேர் கருகிய நிலையில் பலியாகியுள்ளனர்.

மேதினப்பூர் மாவட்டத்தில் சரக்பூருக்கு அருகே திங்கள் இரவு நடந்த இவ் விபத்தில் ரயில்வேப் பாலத்தில் இருந்து கீழே விழுந்த பஸ் மின்சாரக் கம்பியில் மோதியதில் தீப்பற்றியது.

மின்சாரம் தாக்கி 25 பேர் மிகவும் மோசமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

---

செஞ்சிலுவைச் சங்க பவுசரில்

## தீவுப்பகுதியில் நீர் வழங்க பணம் அறவிடப்படுகிறது

(தீவுப்பகுதி)

செஞ்சிலுவைச் சங்கத்தால் வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளுக்கு நன்னீர் வழங்குவதற்காக அன்பளிப்புச் செய்யப்பட்ட பவுசர் மூலம் வழங்கப்பட்டுவரும் குடிநீருக்கு கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றது.

அதுவும் ஒரு கலன் குடிநீருக்கு ஒரு ரூபா வீதம் மக்களிடம் பணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

மக்கள் எங்கு அல்லல்படுகின்றார்களோ அங்கேஉடனே விரைந்து அம்மக்களுக்கு சேவையாற்றுவதும், யுத்த காலத்திலபோது யுத்த பூமிக்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலும் உதவியும், மருத்துவ வசதிகளும் இன்னும் இன்னோரன்ன உதவிகளை புரியும் இந்த நிறுவனத்தின் பெயர் தாங்கி குடிநீர் விநியோகிக்கும் வண்டிதான் கொடுக்கும் குடிநீருக்கு கலனுக்கு ஒரு ரூபா அறவிடும் செயல் ஏற்றுக்கொள்ளக் கூடிய செயல் அல்ல எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (15)

---

## லியனாராச்சி கொலை வழக்கு உடுகம்போலவுக்கு பிடியாணை

(கொழும்பு)

சட்டத்தரணி லியனாராய்ச்சி கொலை வழக்கு தொடர்பாக பிரதி பொலிஸ்மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொலவை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி கொழும்பு மேல் நீதிபதி திரு. ஜயசூரிய பிடியாணை பிறப்பித்துள்ளார்.

நீதிமன்றம் வராமல் திரு. உடுகம்பொல அதற்கான காரணத்தை வேறொருவர் மூலம் அறிவிப்பதையும் நீதவான் கண்டித்தார்.

தற்போது அமெரிக்காவில் தங்கியுள்ள திரு. உடுகம்பொலவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜராக்க பொலிஸ்மா அதிபர் மூலம் இந்த பிடி விறாந்தை நீதிபதி பிறப்பித்தார்.

நீதிமன்ற பிடியாணை திரு. உடுகம் பொலவுக்கு அமெரிக்காவில் வைத்து கையளிக்கப்பட்டதாக நீதிமன்றத்தில் பொலிஸ்மா அதிபரின் கடித மூலம் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் திரு உடுகம்பொல இலங்கை

முன்னாள் தங்காலை பொலிஸ் சுப்பிரின்டன் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிஸார் மீது சட்டத்தரணி லியனாராச்சி கொலை தொடர்பாக இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

---

### முறைசாராக் கல்வி பரீட்சை வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்வி பரீட்சார்த்திகளுக்கான வினாத்தாள்கள் கல்வித் திணைக்களத்தை வந்தடைந்துள்ளன என கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைகள் யாவும் அடுத்தமாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது. (லோ

---

## வின்சன்ற் பெரேராவின் பயணம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வுஅமைச்சர்திரு. வின்சன்ற் பெரோவின் வடபகுதி விஜயம் காலவரையின்றிஒத்திவைக்கப்பட்டது.

இது தொடர்பாக அவர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்.

திட்டமிட்டபடி நடைபெறவிருந்த கலந்துரையாடலும் பின்போடப்பட்டுள்ளதாகவும் அல்லது அமைச்சர் இன்றி அது நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## நல்லூர் ப. நோ. கூ. சங்க உணவுப்பொருட்கள் உதவி

## பேச்சு வார்த்தை

(திருக்கோணமலை)

மூதூர் பகுதியை அபிவிருத்தி செய்வது தொடர்பாக மூதூர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கும் இங்குள்ள சர்வோதயம், முஸ்லிம் இளைஞர் சங்கம், திருமலை மாவட்ட அபிவிருத்திச் சங்கம், திருமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் என்பவற்றுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

மூதூர் ஞானப்பிரகாசம் மண்டபத்தில் நேற்று முன்தினம் இது நடைபெற்றது.

அபிவிருத்தித் திட்டம், மக்களின் வேலைத் திட்டம் என்பனபற்றியும் ஆராயப் பட்டது.

மு. திருஞானம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டிகளுக்கு முல்லை. மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி ஜனாப் அகமட் கான் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கும், வீராங்கணைகளுக்கும் பரிசில்களை வழங்கிச் சிறப்பித்தார். இப்போட்டியில் சேரன் இல்லம் முதலாம் இடத்தைப்பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மண்டைதீவையும் அல்லைப் பிட்டியையும் இணைக்கும் முக்கிய வீதி வாகனப் போக்குவரத்திற்கேற்றவாறு திருத்தி அமைக்க வேண்டும் என்றும் வேலணைக் கோட்டகல்வி அலுவலக கல்வி அதிகாரிகள் டுவித்துள்ளனர்.

தீவுப்பகுதி தெற்கு (வேலணை) உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற திட்டக்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு வேண்டுகோள் தெரிவிக்கப்பட்டது. (15)

மன்றத்தில் ஆஜராகும்படி கொழும்பு மேல் நீதிபதி திரு. ஜயசூரிய பிடியாணை பிறப் பித்துள்ளார்.

நீதிமன்றம் வராமல் திரு. உடுகம்பொல அதற்கான காரணத்தை வேறொருவர் மூலம் அறிவிப்பதையும் நீதவான் கண்டித்தார்.

தற்போது அமெரிக்காவில் தங்கியுள்ள திரு. உடுகம்பொலவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜராக்க பொலிஸ்மா அதிபர் மூலம் இந்த பிடி விறாந்தை நீதிபதி பிறப்பித்தார்.

நீதிமன்ற பிடியாணை திரு. உடுகம் பொலவுக்கு அமெரிக்காவில் வைத்து கையளிக்கப் பட்டதாக நீதிமன்றத்தில் பொலிஸ்மா அதிபரின் கடித மூலம் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் திரு உடுகம்பொல இலங்கை வரவிருப்பதாக அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் கூறினார்.

இந்த வழக்கு விசாரணை மே மாதம் இரண்டாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கில் குற்றம் சாட்டப் பட்டிருந்தது.

நிகழ்வுகளில் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.(லோ

## வின்சன்ற் பெரேராவின் பயணம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அமைச்சர் திரு. வின்சன்ற் பெரேராவின் வட பகுதி விஜயம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

இது தொடர்பாக அவர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்.

திட்டமிட்டபடி நடைபெற விருந்த கலந்துரையாடலும் பிற்போடப்பட்டுள்ளதாகவும் அல்லது அமைச்சர் இன்றி அது நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை வங்கியின் புதிய நிதி மாற்று முறை

(கொழும்பு)

இலங்கை வங்கி கண்டதும் கொடுப்பனவுக் கட்டளை என்ற புதிய நிதிமாற்று முறையை இன்று முதல் அறிமுகப்படுத்துகிறது.

நகரங்களுக்கிடையில் இந்த முறை நடைமுறைப்படுததப் படும் எனவும் முப்பது நாட்களுக்குள் இது செல்லுபடியாகும் எனவும் இலங்கைவங்கி பிரதம முகாமையாளர் றோகினி நாணயக்கார நேற்று தெரிவித்தார்.

கண்டதும் கொடுப்பனவுக் கட்டளைகள் ஆயிரம் ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரை விநியோகிக்கப்படும். ஒவ்வொரு பத்தாயிரம் ரூபாவுக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் கட்டணமாக இருபத்தைந்து ரூபா வங்கியால் அறவிடப்படும்.

துரிதமாகவும், பாதுகாப்பாகவும் பணத்தை மாற்றக் கூடிய இந்த முறை விரைவில் நாடு முழுவதும் அமுல் செய்யப்படவுள்ளது.

### எழுத்தாளர் டானியல்

## கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்க வேண்டும்

(கொழும்பு)

ஈழத்து எழுத்தாளர்களில் தனது ஆளுமை மிக்க ஆற்றலை வெளிப்படுத்தி சாதனை படைத்தவர் அமரர் டானியல். எட்டாம் வகுப்பு மட்டும் படித்து இலக்கிய உலகில் ஆற்றலை வெளிப்படுத்திய ஜி. பி. சேனநாயக்காவுக்கு களனி பல்கலைக் கழகம் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கியதைப் போல எழுத்தாளர் டானியலுக்கு யாழ் பல்கலைக் கழகம் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்க வேண்டும்.

இவ்வாறு எழுத்தாளர் டானியலின் அஞ்சலிக் கூட்டத்தில் மலையக கலை இலக்கியப் பேரவைச் செயலாளர் அந்தனி ஜீவா குறிப்பிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிச் ஜீவா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேமன்கவி அஞ்சலி கவிதையை வாசித்தார்.

மேலும் திரு. அந்தனி ஜீவா பேசுகையில் எழுத்தாளர் டானியலின் படைப்புகள் காலத்தை வென்றவை அவைகள் வரலாற்று ஆவணங்களாகும். படித்து பாதுகாக்க வேண்டிய பொக்கிஷங்களாகும். சமூகவியல் ஆய்வாளர் கருத்துக்கு பல பயனுள்ள தகவல்களை தரவல்லது.

எழுத்தாளர் ப. ஆப்தீன் பேசுகையில் இன்று அமரர் கே. டானியலுக்கு ஒரு சில எழுத்தாளர்களாவது ஒன்று கூடி அவரது நினைவுத்தினத்தில் அவரது இலக்கிய ஆற்றலைப்பற்றி மதிப்பீடு செய்வது காலத்தின் தேவையாகும் என்றார். திரு. ராஜ ஸ்ரீகாந்தன் பேசுகையில்

அமரர் டானியல் போன்ற படைப்பாளிகளை ஆண்டு தோறும் நினைவு கூறுவது எழுத்தாளர்களின் கடமையாகும். அவரது வெளிவராத படைப்புக்களை அச்சில் கொண்டு வரவேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் அவரைப்பற்றிய, அவரது படைப்புகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொன்னார்.

இரா. சடகோபன் நன்றி கூறினார் (27)

## நல்லூர் ப. நோ. கூ. சங்க உணவுப்பொருட்கள் உதவி

(பண்டத்தரிப்பு)

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் கால் பொருத்தும் நிறுவனத்திற்கு அரிசி, சீனி, கோதுமை, பால்மா போன்ற உணவுப்பண்டங்களை வழங்கி உதவியுள்ளது.

சங்கத் தலைவர் திரு. கனக சபாபதி தலைமையில் நடந்த இயக்குனர் சபை ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி, உணவுப் பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளது. (12)

## மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு சங்கங்களில் கிளைக்குழு தேர்தல்கள் நடைபெறவுள்ளன

(கல்லாறு - களுவாஞ்சிக்குடி)

நாட்டின் சீரற்ற நிலை காரணமாகப் பிற்போடப் பட்டு வந்த மட்டக்களப்பு மாவட்டப் ப. நோ. கூ. சங்கங்களின் கிளைக்குழுத் தேர்தல்களை இரு மாதங்களுக்குள் முழுமையாக நடாத்தி முடிப்பதற்கு மட்டக்களப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. மு. லோகநாயகம் தீவிர முயற்சி எடுத்துள்ளார்.

இதற்கு முன்னோடியாக இம்மாதம் 31ஆம் திகதியுடன் சகல ப. நோ. கூ. சங்கங்களும் தங்களது வாக்காளர் இடாப்புக்கடை மூடி தேர்தலை உரிய முறையில் நடாத்தி முடிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பணித்துள்ளார்.

இதற்காக எல்லாச் சங்கங்களுக்கும் பொதுவான கால அட்டவணை ஒன்றையும் தயாரித்து அனுப்பியுள்ளார் இக்கால அட்டவணைப்படி 3- 05- 90க்குப் பின்னர் எல்லாச் சங்கங்களிலும் மேற்படி கிளைக்குழுத் தேர்தல்கள் நடாத்தப்படுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

அனேகமாக மட்டக்களப்பு மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களில் 1987இல் மேற்படி தேர்தல்கள் நடைபெற்றிருக்க வேண்டும். மாகாணசபைத் தேர்தல் முடிந்தபின்னரும் மேற்படி கிளைக்குழுத் தேர்தல்களை நடாத்தி முடிப்பதற்கு முயற்சிக்கப்பட்டது. எனினும் தேர்தல்கள் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கிளைக்குழுத் தேர்தல்கள் நடைபெறாததால் சங்கங்கள் பல நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்கின. வரவு செலவுத் திட்டம் அங்கீகரித்தல், சங்கத்திற்கான உச்ச கடன் எல்லை தீர்மானித்தல், எண் பார்வை அறிக்கைகளை பரிசீலனை, சொத்துக்கள் தளபாடங்கள் வாங்குதல், விற்றல் என்பனவற்றிற்கு பொதுச்சபை கூடியே தீர்மானம் எடுக்கும்.

கிளைக்குழுத் தேர்தல்கள் நடைபெறாகதால் இயக்குனர் சபை தீர்மானம் எடுத்து கூட்டுறவு உதவி ஆணையாளரின் விசேட அனுமதி பெற்றே மேற்படி தீர்மானங்களை சங்க நிர்வாகங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளன. எனினும் கிளைக்குழுத் தேர்தல்கள் நடந்து பொதுச்சபை கூடும் போது மேற்படி அமுல் செய்யப்பட்ட தீர்மானங்களுக்கும் பொதுச் சபையின் பின் அனுமதி பெறப்பட வேண்டியது அவசியமாகும்.

எனவே கிளைக்குழுக் தேர்தல்களை நடாத்தியே முடிப்பதென்ற உதவி ஆணையாளரின் உறுதியான முடிவை சங்க வட்டாரங்கள் பெரிதும் வரவேற்கின்றன.

## கோக்குவில் மத்தியபகுதிக்கு ஜனசக்தி உரித்தாவணம்

(சுதுமலை)

கொக்குவில் மத்திய கிராம சேவையாளர்பிரிவைச் சேர்ந்த சுமார் 750 பேருக்கு சென்ற ஞாயிற்றுக்கிழமை ''சனசக்தி உரித்தாவணம்'' கிராமசேவையாளர் திரு. கே. அம்பிகைபாகனால் கையளிக்கப்பட்டது.

இந்த உரித்தாவணத்தின் மூலம் மாதம் இரண்டாயிரத்து ஐநூறு ரூபா ஒரு குடுப்பத்திறகு கிடைக்க வழி வகுக்கப்பட்டிருக்கிறது.

இதில் மாதமாதம் 1024/- ரூபா தபாற்கந்தோர் அல்லது வங்கிகளில் சேமிப்புப் பணமாக வைப்புச் செய்யப்படுகிறது.

மிகுதிப்பணத்திற்கு பொது மக்கள் தமது உணவுப் பொருட்களை கூட்டுறவுச்சங்கக் கடைகளில் கொள்வனவு செய்யலாம். இந்த உதவி இரண்டு வருடங்களுக்கு தொடர்ந்து கிடைத்து வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

### தற்கொலை முயற்சி

பள்ளிக்குடியிருப்பில் மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக நஞ்சு அருந்தி தற்கொலை செய்ய முயன்றவர், அயலவரின் முதலுதவியால் காப்பாற்றப்பட்டார். இச்சம்பவம் நேற்று முன் தினம் நடைபெற்றது.

## பல்கலைக்கழக அனுமதிக்கு 30000 பேர் தகுதி

(பண்டாரகம)

பல்கலைக்கழக அனுமதிக்காக சுமார் முப்பதாயிரம் மாணவர்கள் தேவையான தகமைகளுடன் இருந்தபோதிலும் ஆறாயிரம் மாணவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு விவசாய கூட்டுறவு அமைச்சர் லலித் அத்துலக் முதலி இன்று நடைபெற்ற ஒரு வைபவத்தில் கூறினார்.

அரசாங்கம் போஷாக்கு இன்மையை நீக்கவும் திட்டம் ஒன்றை ஆரம்பித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

## மாபெரும் மென்பந்து கிரிக்கெட் போட்டிகள்

(யாழ். விளையாட்டு நிருபர்)

நொதேர்ன் ஸ்போட்ஸ் சஞ்சிகையின் ஆதரவில் மாபெரும் மென்பந்து (6 ஓவர், 11ஓவர்) கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் இறுதியில் நல்லூரில் நடைபெற வுள்ளது.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் போட்டிக் குழு ஆய்த்தம் செய்யவுள்ளது.

கடைசியாக இப் போட்டி 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற போது அரியாலை விளையாட்டுக் கழகம் 11 ஓவர் போட்டியில் வெற்றி பெற்று சிலோன் டுபாக்கோ கொம்பனி கேடயத்தைக் பெற்றுக் கொண்டது.

6 ஓவர் போட்டியில் ,,நொதேர்ன் ஸ்போட்ஸ் ஸ்டார் வி. கழகம் சம்பியன் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

1932 ஆம் ஆண்டு இப் போட்டிகள் நடைபெற்ற போது 34 விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இம் முறையும் அதிகமான விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நவாலி - கட்டுடை வீதியின் அவலநிலை

(சுதுமலை)

நவாலி - கட்டுடை வீதி நீண்ட காலமாக கவனிப்பாரற்று மிகமோசமான நிலையில் இருந்து வருகின்றது. இதனால் சாதாரண பாதசாரிகள் கூட நடந்து செல்லமுடியாமல் இருக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கை மேற்கொண்டு இவ்வீதியை திருத்துவார்களா என்று பொதுமக்கள் கேட்கிறார்கள். (19)

## இரு தமிழர் சித்தி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி எழுதுனர் சேவை இரண்டு ''அ'' வுக்கான பரீட்சையில் அகில இலங்கையிலேமே இரண்டு தமிழர்களே சித்தியெய்தியுள்ளனர்.

தா. தர்மரட்ணம், ந. வாசுகி என்பவர்களே இவ்விருவருமாவர். யாழ். மாநகர சபை ஊழியராகப் பணியாற்றும் போது இந்தப் பரீட்சையில் சித்தியெய்தி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(லோ)

# நாட்டியத்துறையில் சர்வதேசரீதியாக புகழ்பெற்றவர் கலைஞர் வேல்ஆனந்தன்

## மேல்மாகாண முதலமைச்சர் பாராட்டு

(கொழும்பு)

"இசையும் நடனமும்" இலங்கை மக்களின் பாரம்பரிய கலைகளில் மிக முக்கியமானது. நாட்டியத்துறையின் சர்வதேச புகழ்பெற்ற கலைஞர் வேல் ஆனந்தனின் வெள்ளிவிழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் பெருமைப்படுகிறேன். கலைஞர்களும், கலைகளும் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும்.

இவ்வாறு கலைஞர் வேல் ஆனந்தனின் வெள்ளி விழா பாராட்டு நிகழ்ச்சிக்கு சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட மேல் மாகாண சபை முதல்வர் திரு. சுசில் முனசிங்க குறிப்பிட்டார்.

கடந்த சனிக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்ற வேல்ஆனந்தன் குழுவினரின கலை நிகழ்ச்சி, பாராட்டு விழாவில் திரு. சுசில் முனசிங்க மேலும் பேசுகையில், "நமது ஜனாதிபதி பிரேமதாஸா கலையையும், கலைஞர்களையும் நேசிப்பவர். அதனால் வாழும்போதே கலைஞர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவேண்டும் நாட்டிய கலைஞர் வேல் ஆனந்தனின் திறமைகள் மதிப்பு பாராட்டப்பட வேண்டும் என்றார்.

கலைஞர் வேல் ஆனந்தனின் வெள்ளிவிழாவை கனடிய தூதுவர் திரு. மைக்கல் டெர்பல், இந்திய உதவி தூதுவம் ஸ்ரீ பிரேமத்தேஷ்ராத் கலைஞர் பாணிபாரத, திரு. கே. கணேசலிங்கம் ஆகியோர் குத்துவிளக்கேற்றிஆரம்பித்து வைத்தனர்.

கலைஞர் வேல் ஆனந்தன் அவர்கட்கு முருகபக்தர் திரு. வி. டி. வி. தெய்வநாயகம் பிள்ளை திரு. பொ. வல்லிபுரம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து கௌரவித்தனர்.

வெள்ளிவிழாவின் சிறப்பு அம்சமாக கலைஞர் வேல் ஆனந்தன் நவரசபாவங்களை அபிநயப்படுத்தி சபையோரின் பாராட்டைப் பெற்றார். திருவிளையாடல் நாட்டிய நாடகமும், சில நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (27)

## தவறணையை இடம் மாற்றவும்

(தீவுப்பகுதி)

காரைநகரின் நுழைவாயிலாகிய வலந்தலை தொப்பிக் கட்டுஎன்னுமிடத்தில் அமைந்திருக்கும் கள்ளுத் தவறணையை, அவ்விடத்திலிருந்து ஓர் ஒதுக்குப் புறமான இடத்திற்கு மாற்ற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

வெளியிடங்களிலிருந்து காரைநகருக்கு வருவோர் முதலில் தரிசிப்பது இந்தத் தவறணையைத்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

திருமதி (டாக்டர்) ஞானாம்பிகை இராமதாஸ் பரிசில்கள் வழங்குவார். (24)

## சுவிஸ் வங்கியில் கள்ளர் கைவரிசை

(ஜெனிவா)

ஆயுதந்தாங்கிய நாலு பேரைக் கொண்ட கோஷ்டியொன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை ஜெனிவாவிலுள்ள வங்கியொன்றிலிருந்து 23 லட்சம் டாலர் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது. இக்கொள்ளை 'ஒரு உள்வேலை' என்று கருத்துத் தெரிவித்த பொலிஸார் 40 வங்கி ஊழியர்களை விசாரணை செய்துள்ளார்கள்.

வெளிநாட்டு வங்கியொன்றிலிருந்து பெருந்தொகையான பணம் ஜெனிவாவில் இயங்கிவரும் சுவிற்சலாந்து யூனியன் வங்கியின் கிளைக்கு வந்த சமயம் பார்த்து மேற்படி வங்கியில் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாம்.

முப்பது கிளைகளுக்குப் பணம் விநியோகம் செய்யும் இவ்வங்கியில் வார இறுதியில் பெருந்தொகைப் பணம் கையிருப்பில் இருந்தது.

அபாய அறிவிப்பை இயக்காமல் தடுப்பதற்காக இரண்டு வங்கிக் காவலாளர்களையும், ஒரு சிற்றூழியரையும், கட்டிடத்தைப் பராமரிப்பவரையும் கொள்ளையர் கட்டி வைத்துள்ளனர்.

வங்கியின் வெளிநாட்டுப் பிரிவில் வேலை செய்பவர்களையும் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். 200கிலோ எடையுள்ள சுவிஸ் பிராங்ஸ், பிரான்ஸ் பிராங்ஸ், ஜெர்மன் மார்க், ஸ்ரேலிங் ஆகிய பணவகைகளை பத்து இரும்புப் பெட்டிகளிலிருந்து ஆயுதந் தாங்கிய கோஷ்டி கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

## நூலகங்களில் பத்திரிகைகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டிலுள்ள சில நூலகங்களில் ஈழநாதம் மற்றும் உள்ளூர்ப் பத்திரிகைகள் தமக்கு வாசிக்கக் கிடைப்பதில்லை என பல வாசகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## சென். ஜோன்ஸ் சாதனை

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். கோட்டப் பாடசாலைகளின் மெய் வல்லுனர் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி ஒரு சாதனையை நிலை நாட்டியது. சென். ஜோன்ஸ் கல்லூரி பங்குபற்றிய 40 போட்டிகளில் 24 முதல் இடத்தையும், ஏழு போட்டிகளில் 2. ஆம் இடத்தையும், மூன்று போட்டிகளில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

அத்துடன் 8அஞ்சல் ஓட்டப் போட்டிகளிலும் 1. ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.


எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக

இறக்குமதி செய்யப்பட்ட (எசன்ஸ்) வகைகள்,
பேக்கறிகளுக்குத் தேவையான பொருட்கள்,
ஐஸ்கிறீம் தயாரிப்புகளுக்கேற்ற பொருட்கள்
மொத்தமாகவும், சில்லறையகவும்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

தங்கமணி ஸ்ரோர்ஸ்,
35, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

தொலைபேசி 23458

(B/461)

புத்தாண்டே வருக! வருக!

தரமிகு M. S. மகேந்திரனின்
பீடா பாக்கு கொப்பறா
கேசா பாலாமணி

மற்றும் இந்தியா, இலங்கை பத்தி வகைகள் எவர்சில்வர், சாய்ப்புச் சாமான்கள் மற்றும் சகலவிதமான நூல் வகைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்
162, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(B/459)

புத்தாண்டு வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

முருகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்
களனி ரயர், ரியூப் விநியோகஸ்தர்கள்
MURUGAN MOTOR STORES
8/3, Stanley Road, Jaffna.

B.426

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!

ஷாந்த மோட்டோர்ஸ்
Shantha Motors
MOTOR SPARES & ACCESSORIES
61, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B/457)

பிறக்கப்போகும் புதுவருட தினத்திலே எமது மக்கள்
அனைவருக்கும் எமது அன்பு கனிந்த புதுவருட

அனனவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!

## முருகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

களனி ரயர், ரியூப் விநியோகஸ்தர்கள்

## MURUGAN MOTOR STORES

8/3, Stanley Road, Jaffna.

B.426

## ஷாந்த மோட்டோர்ஸ்

## Shantha Motors

MOTOR SPARES & ACCESSORIES

61, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B/457)

பிறக்கப்போகும் புதுவருட தினத்திலே எமது மக்கள்
அனைவருக்கும் எமது அன்பு கனிந்த புதுவருட
வாழ்த்துக்கள் உரித்தாகுக!

ஒருவர்: மச்சான் "சொப்பிங்" செய்து களைத்துப் போயிட்டேன். சரியான வெப்பம் என்னால் எனி நடக்க முடியாது.

மற்றொருவர்: மச்சான் அந்தா தெரிகின்றது பார் லிங்கம் ஸ்ரோசில் குளிர்பான சோடாக்கள் வைத்திருக்கினம் அங்கு போய் இரண்டு சோடா எடுத்துக் குடிப்போம் வா, வா.

ஆம். உங்கள் வெப்பத்தை தனிப்பதற்கு
நீங்கள் செல்ல வேண்டிய இடம்

## லிங்கம் ஸ்ரோர்ஸ்

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(யானை மார்க் குளிர்பானம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்)

(B/441)

அனனவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!

❋ ஈழநாதம் பத்திரிகைக்கு எமது இனிய வாழ்த்துக்கள் உரித்தாகுக. ❋

பெண்களின் அழகுக்குக்கேற்ற மாலை வகைகள், காப்புகள்
மற்றும் பன்ஸிகுட்ஸ் பொருட்களுக்கு

## அம்பிகாபதி

66, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(Dealers in sewing & Embroidery threads)

B/442

புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும்
உரித்தாகுக!

சாரி வகைகள், ஸ்கேட்-பிளவுஸ் வகைகள்
டிரஸ் மெற்றீரியல்ஸ். பேபி சூட் வகைகள்
சேட்டிங், சூட்டிங், றெடிமேட் ஆடைகள்
சாரிகளுக்குரிய கலர்களில்
பிளவுஸ் துணிகள் மற்றும்
சகல புடவைத் தினுசுகளுக்கும்
தனிச்சிறப்புப் பெற்ற ஜவுளி ஸ்தாபனம்

## சரண்யா ரெக்ஸ்

(மொத்த, சில்லறை புடவை விற்பனை நிலையம்)
174 (86), கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24150
B/439

மலர்க புத்தாண்டு!!

## பெஷன் ஹவுஸ்

65, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

எம்மிடம் அலுமினியம், எவர்சில்வர் பாத்திரங்கள், பீங்கான் கோப்பைகள், அழகுசாதனப் பொருட்கள், சிறுவர் சைக்கிள்கள் மற்றும நாகரிகப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள்

யாவும் நிதான விலையில் கிடைக்கும்.

## FASHION HOUSE

தொலைபேசி: 23046

65, K. K. S. Road, JAFFNA.

(B/443)

### சிந்தனைக்கு

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்

- திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 29 - 03 - 90

## வேண்டாம் கோதுமைப் பண்டம்

பாணின் விலையும் கோதுமை மாவின் விலையும் மீண்டும் அதிகரித்திருக்கிறது. பாண் விலை முப்பது சதத்தினாலும் கோதுமை மாவின் விலை தொண்ணூறு சதத்தினாலும் உயர்ந்திருக்கிறது.

ஒரு இறாத்தல் பாண் என்று சொல்வது வழக்கம். பாணின் நிறை ஒரு இறாத்தலாக எப்போதுமே இருந்ததில்லை என்று சொல்லலாம்.

இப்போது தயாரிக்கப்படும் பாணின் எடை முந்நூற்றிஐம்பது கிராமிலிருந்து நானூறு கிராம்வரைதான் பெரும்பாலும் இருக்கும்.

இந்த நிறை குறைந்த பாணின் விலை இப்பொழுது நான்கு ரூபாய் தொண்ணூறு சதம்! அதாவது ஐந்து ரூபாய்! (பத்துச் சதம் சில்லறையில்லை!)

ஒரு கிலோ கோதுமை மாவின் விலை இப்பொழுது பதின்மூன்று ரூபாய் பதினைந்து சதமாகும்.

இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன்பு பாணும் பணிசும் கேக்கும் அதிசயப்பண்டமாக வீடு தேடி வரும்போது சிற்றுண்டியாக சுவை பார்க்கும் பழக்கம் ஏற்பட்டது.

இதேசமயம் கோதுமை மா பசை இண்டும் மா என்ற பெயரையே பெற்றிருந்தது. தேயிலைகூட இரண்டாவது யுத்த காலத்தில்தான் இலங்கைத் தேயிலைப் பிரசார சபையினரால் வீடு வீடாகத் தேநீர் தயாரித்துக் கொடுத்து அறிமுகம் செய்யப்பட்டது.

இரண்டாவது யுத்த காலத்தில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்ட சமயத்தில் கோதுமை அரிசியும் கோதுமை மாவும் உணவுப் பொருள்களாக அறிமுகம் செய்யப்பட்டன.

கோதுமை அரிசிக் கஞ்சி, கோதுமை அரிசிச் சோறு என்று வீடுகள் தோறும் கோதுமை அரிசி பெரும் பாடுபட்டது. கோதுமை மாவின் நிலையும் இதுவே.

பல வீடுகளில் இந்த கோதுமை மா, கோதுமை அரிசி நுழையவே இல்லை. இவை இங்கு அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்பே ஒடியல்மா, குரக்கன் மா, மரவள்ளி மா, சாமை அரிசி, வரகரிசி என்று நமது உள்நாட்டு உற்பத்தி உணவுப் பொருள்களை உண்டு

---

### இந்திய - புலிகள் போர்: ஒரு கண்ணோட்டம் - 4

# 72 மணிநேரத்தில் புலிகளை அழிக்க களத்தில்வந்த இந்தியபடை திணறல்



பாரத யுத்தங்களில் புகழ் பெற்ற விசேட இராணுவப் பிரிவுகளையும், காட்டுப்புற கெரில்லாயுத்தத்தில் கை தேர்ந்த அதிரடிப்படை அணிகளையும் இந்திய அரசு இறுதியாக புலிகளுக்கு எதிராக ஏவிவிட்டது. இந்தப் படையணிகள்கூட புலிகளின் போர்த் திறனை சமாளிக்கமுடியாது மூக்குடைபட்டு பின்வாங்கின. கடந்த பங்குனி மாதம் முல்லைதீவு காட்டுப் பகுதிக்குள் பிரவேசித்த குர்க்கா அதிரடிப்படை அணியொன்று புலிகளின் வீராவேச எதிர்த்தாக்குதல்களை சமாளிக்க முடியாது பெரிய உயிர்ச் சேதத்துடன் பின்வாங்கியது. பல நாட்களாக நடைபெற்ற இந்தச் சண்டையில் குர்க்கா படைத் தளபதி கேணல் பாஸ்கியும், 90 குர்க்கா வீரர்களும் கொல்லப்பட்டதாக மேற்கத்தைய இராணுவ நிபுணர்கள் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. இந்திய அரசானது தனது இராணுவ பலத்தையும், தனது நவீன ஆயுத

ளர்கள் விமர்சித்தனர்.

வியட்னாம், ஆப்கானிஸ்தான் போராட்டங்களையோ உலகில் நிகழ்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களையோ, அன்றி உலக தேசிய விடுதலைப் போராட்டங்களையோ இந்திய புலிகள் யுத்தத்துடன் ஒப்புநோக்கிப் பார்க்கும் பொழுது ஒரு விசேஷத் தன்மை தெட்டத் தெளிவாகப் புரியும். ஏனைய போராட்டங்களில், அதாவது தேசிய விடுதலை கோரி ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நிகழ்ந்த போர்களில் ஒடுக்கப்பட்ட நாடுகளின் விடுதலை இயக்கங்களுக்கு நேச நாடுகள் பெருமளவில் இராணுவ உதவிகளை அளித்து வந்தன. இந்த உதவிகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தை வலுவூட்டியது. வியட்னாம் விடுதலை இயக்கத்திற்கு சீனாவும் சோவியத் யூனியனும் உதவின. ஆப்கானிஸ்தான் கெரில்லா இயக்கங்களுக்கு அமெரிக்காவும் பாகிஸ்தானும் உதவின. இப்படியாக ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற கண்டங்களில் நிகழ்ந்த விடுதலைப் போராட்டங்களை எடுத்துக் கொண்டால் அந்தந்த விடுதலை இயக்கங்களுக்கு நேச நாடுகள் இராணுவ உதவிகளை அளித்து வந்திருப்பதை அவதானிக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எந்தவொரு வெளிநாட்டு உதவியும் கிடைக்கவில்லை. இந்திய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எமது இயக்கம் தனித்து நின்று போராடி, பிரமாண்டமான ஒரு இராணுவ இயந்திரத்தை தன்னந்தனியே

விடுதலைப் புலிகளை தமிழீழ மக்களிடமிருந்து அரசியல் ரீதியாக அந்நியப்படுத்தி விடலாமென இந்திய அரசு எண்ணியது. ஆனால் நடந்ததோ வேறு. தேர்தலின்றி, மக்களின் ஆசியின்றி, இந்திய ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளாக மாகாண ஆட்சியில் அமர்த்தப்பட்ட தமிழ் ஆயுதக் குழுக்கள் மக்களின் விரோத சக்தியாக, மக்களுக்கு எதிராக செயல்படத் தொடங்கினர். இந்திய ஆக்கிரமிப்பிற்கும், இந்திய இராணுவ அட்டூழியங்களுக்கும் எதிராக குரல் கொடுத்த தேசாபிமானிகளையும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நின்ற அமைப்பினர், அரசியல் தலைவர்கள், சமூகத் தொண்டர்கள், வர்த்தகர்கள், மக்கள் குழுத் தலைவர்கள் மற்றும் விடுதலைப் புலி வீரர்களின் உறவினர்கள் என்ற ரீதியில் பெருந்தொகையில் அப்பாவிப் பொதுமக்களை இந்த ஆயுதக் குழுக்கள் மிருகத்தனமாகக் கொலை செய்தன. கொலைகளுடன் நின்றுவிடாது பொது மக்களை மிருகத்தனமாக அடித்துத் துன்புறுத்தல், வீடுகளில் புகுந்து கொள்ளையடித்தல், காரணமின்றி கைதுசெய்து காவலில் வைத்தல், இப்படியான அடாவடித்தனங்களிலும் இக்குழுக்கள் இறங்கின. இது மட்டுமன்றி, இளம்பெண்களைக் கடத்திச் சென்று இந்திய இராணுவ அதிகாரிகளின் காமவெறிக்கு பலிகொடுத்து தமிழ் இனம் இதுவரை கண்டிராத மிகக் கேவலமான செயல்களிலும் இவர்கள் ஈடுபட்டனர்.

இந்த தமிழ் துரோக அராஜ

பிரதிநிதிகளென முத்திரை குத்தி, அவர்களை மக்கள் மத்தியில் நிலைநிறுத்தும் இந்தியாவின் சூழ்ச்சிகரத் திட்டம் தோல்வி கண்டது. இந்தியஅடிவருடிகளின் அராஜகப் போக்கு காரணமாகப் புலிகள் இயக்கம் மீது தமிழீழ மக்களின் நம்பிக்கை மேலும் வலுப்பெற்றது

இந்திய - புலிகள் போர் முடிவில்லாமல் நீண்டு செல்வது மட்டுமல்லாமல், இந்திய இராணுவத்தால் விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெற்றிகொள்ள முடியாது என்ற உண்மையை சிங்கள அரசு உணரத் தொடங்கியது. அத்துடன் இந்திய ஏகாதிபத்திய ஊடுருவலைக் கண்டித்தும், இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேற வேண்டுமென கோஷம் எழுப்பியும் தென்னிலங்கையில் ஜே. வி. பி. இயக்கம் ஒரு கிளர்ச்சியைக் கட்டவிழ்த்து விட்டது. இந்தக்கிளர்ச்சி வன்முறை வடிவத்தில் பூதாகரமாகவளர்ந்து புதிதாகப்பதவியேற்ற பிரேமதாஸா ஆட்சியை ஆட்டம் காணச்செய்தது

இந்திய இராணுவ பலமூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தையழித்து, தமிழீழமக்களின் தேசிய சுதந்திரப் போராட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே முந்திய ஜெயவர்த்தனா அரசு ராஜீவ் காந்தியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது என்பதை எமது மக்கள் அறிவார்கள். விடுதலைப் புலிகளோடு இந்திய இராணுவத்தை மோதவைத்தது ஒரு பெரிய ராஜ தந்திர வெற்றி என ஜெயவர்த்தனா அரசு எண்ணியது. இலங்கை இராணுவமானது இஸ்ரேலிய

**72 மணிநேரத்தில் புலிகளை அழித்துவிடுவோமென களத்தில் குதித்த இந்திய இராணுவம் நாட்கள் கிழமைகளாகி, கிழமைகள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகியும் விடுதலைப் புலிகளைச் சமாளிக்க முடியாது திண்டாடியதும் இலங்கை அரசுக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.**

**அமைதிப்படை வேடத்தில் இலங்கையில் காலூன்றி இருப்பது ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் என்பதை சகல இனத்தோரும் உணரத் தொடங்கினர். இந்த அரசியல் சூழ் நிலையில்தான் இந்திய இராணுவத்தை வெளியேற்றும் மனுப்பெற்று பிரேமதாசா ஆட்சிபீடம் ஏறினார்.**

---

### ஊர்சுற்றி

எழுதுவது

கொக்குவிலில் கலாபவனம் ஒழுங்கை வழியாக நேற்றுக் காலை நண்பரும் நானும் போய்க் கொண்டிருந்தோம். சைவப் பள்ளிக்கூடம் என அழைக்கப்படும் கொக்குவில் ஞான பண்டித வித்தியாசாலையின் முன்பாக இரண்டு பெரிய சொகுசு பஸ்வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. பாடசாலைப் பிள்ளைகள் சிலர் பஸ்களில் ஏறுவதும் இறங்குவதுமாகக் காணப்பட்டனர். ஆசிரியர்கள் சிலர் உள்ளே அங்குமிங்கும் சுறுசுறுப்பாகத் திரிந்து கொண்டிருந்தனர்.

என்ன சமாச்சாரம் என்று விசாரித்துப் பார்த்ததில் பிள்ளைகள் சுற்றுலா போகிறார்கள் என்று பதில் கிடைத்தது.

பிள்ளைகளுக்குத்தான் எத்தனை சந்தோஷம். பள்ளிக்கூடத்துக்குப் பிள்ளைகளை அனுப்பலாமா, பிள்ளைகள் சுகமாகத் திரும்பி வர முடியுமா, ஷெல் விழுமா, குண்டு போடுவாங்களா, ஆமிக்காரன் பள்ளிக்கூடத்துக்குள் நுழைந்து சுடத் தொடங்கினால் என்ன செய்வது? இப்படியெல்லாம் பெற்றோர் ஏங்கித் தவித்த காலம் போய் பின்னர் பள்ளிக்குப் போன பிள்ளைகளை பிள்ளை பிடிகாரர் பிடித்து விடுவார்களோ என்று பயந்து பயந்து வாழ்ந்த காலமும் இப்போது நீங்கிவிட்டது.

பல வருடங்களுக்குப் பின்னர் பாடசாலைப் பிள்ளைகள் மகிழ்ச்சி பொங்க உற்சாகத்துடன் சுற்றுலாவுக்குப் புறப்பட்டுச் செல்கிறார்கள். பெற்றோர் வழியனுப்பி வைக்கிறார்கள்.

யாழ்ப்பாணம்-கொழும்பு போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த பல பஸ்கள் இப்போது ரயில் சேவைகள் நடைபெறுவதால் கொழும்புப் பயணத்தை நிறுத்தியுள்ளன. இப்படி இரண்டு பஸ்கள்தான நேற்றுப் பள்ளிக்கூடப்பிள்ளைகளைச் சுற்றுலாவுக்கு ஏற்றிச் சென்றன!

யாழ். நகரில் வேம்படி மகளிர் கல்லூரிச் சந்தியில் ஷெல் அடி குண்டு வீச்சுகளினால் வீதி சேதமடைந்து போக்குவரத்துச் செய்வது பெரும் சிரமமாக இருந்தது. இந்த இடத்தில்

ஏற்பட்டது.

இதேசமயம் கோதுமை மா பசை இண்டும் மா என்ற பெயரைப் பெற்றிருந்தது. தேயிலைகூட இரண்டாவது யுத்த காலத்தில்தான் இலங்கைத் தேயிலைப் பிரசார சபையினரால் வீடு வீடாகத் தேநீர் தயாரித்துக் கொடுத்து அறிமுகம் செய்யப்பட்டது.

இரண்டாவது யுத்த காலத்தில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்ட சமயத்தில் கோதுமை அரிசியும் கோதுமை மாவும் உணவுப் பொருள்களாக அறிமுகம் செய்யப்பட்டன.

கோதுமை அரிசிக் கஞ்சி, கோதுமை அரிசிச் சோறு என்று வீடுகள் தோறும் கோதுமை அரிசி பெரும் பாடுபட்டது. கோதுமை மாவின் நிலையும் இதுவே.

பல வீடுகளில் இந்த கோதுமை மா. கோதுமை அரிசி நுழையவே இல்லை. இவை இங்கு அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்பே ஒடியல்மா, குரக்கன் மா. மரவள்ளி மா, சாமை அரிசி. வரகரிசி என்று நமது உள்நாட்டு உற்பத்தி உணவுப் பொருள்களை உண்டு வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் கோதுமைப் பண்டங்களைத் திரும்பியும் பார்க்க மறுத்தனர்.

காலப்போக்கில் பாணும் கோதுமை மாவும் சுலபமான உணவு வகைகளாக மாறிவிட்டன. பழைய உணவுகளை மறந்து விட்டனர்.

ஆனால் 1970 ஆம் ஆண்டில் திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகளைக் கொண்ட ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது.

இந்த அரசில் நிதியமைச்சராக இருந்த டாக்டர் என். எம். பெரேரா உணவு மற்றும் சகல பொருள்களின் இறக்குமதிகளையும் தடை செய்து உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளித்தார்.

சும்மா கிடந்த நிலங்களிலெல்லாம் கொத்தி உழுது பயிர்கள் செழித்து வளர்ந்தன. வீடுகளில் ஒரு அங்குலத்தில்கூட மரவள்ளித்தடி நாட்டப்பட்டது. வெங்காயம், மிளகாய், பயறு, உழுந்து, சோயா என்று தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

மரவள்ளியுடன் குரக்கனும் சாமையும் சந்தைக்கு வந்தன. உணவுத் தட்டுப்பாடும் நீங்கியது. விவசாயிகள், தோட்டக்காரர்களின் பணத்தட்டுப்பாடும் நீங்கின.

இந்த நிலை நீடிக்கவில்லை. இதன்பின் ஆட்சிக்கு வந்தவர்கள் சகல பொருள்களையும் இறக்குமதி செய்தனர். வடபகுதி விவசாயிகள் பழிவாங்கப்பட்டனர்.

இன்று வெளிநாட்டு உணவுப் பொருள்களிலேயே தங்கி வாழ்ந்துகொண்டிருக்கும் நிலை, வெளிநாட்டு வேலை வாய்ப்பினால் கிடைக்கும் பணம் தோட்டக் காணிகளிலும் வீட்டுக் காணிகளிலும் கட்டிடங்கள், வீடுகள், மாளிகைகள்தான் எழுந்து நிற்கின்றன. பயிர்களைக் காணமுடியவில்லை.

இந்த நிலை மாற வேண்டும்; தோட்டக்காணிகளிலும் வயல் நிலங்களிலும் வீடு மற்றும் கட்டிடங்கள் கட்டப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

உணவுப் பயிர்ச் செய்கை ஊக்குவிக்கப்பட வேண்டும். மீண்டும் மரவள்ளியும் ஒடியல்மாவும் சாமை அரிசியும் குரக்கன் மாவும் சந்தைக்கு வர வேண்டும். வீட்டுக் குசினிக்குள் இவை நுழைய வேண்டும். இந்த நிலை வந்தால் பாண் எதற்கு கோதுமை மாவுதான் எதற்கு?

---

குதல்களை சமாளிக்க முடி தலை இயக்கங்களுக்கு நேச

> அமைதிப்படை வேடத்தில் இலங்கையில் காலூன்றி இருப்பது ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் என்பதை சகல இனத்தோரும் உணரத் தொடங்கினர். இந்த அரசியல் சூழ் நிலையில்தான் இந்திய இராணுவத்தை வெளியேற்றும் மனுப்பெற்று பிரேமதாசா ஆட்சிபீடம் ஏறினார்.

யாது பெரிய உயிர்ச் சேதத்துடன் பின்வாங்கியது. பல நாட்களாக நடைபெற்ற இந்தச் சண்டையில் குர்க்கா படைத் தளபதி கேணல் பாஸ்கியும், 90 குர்க்கா வீரர்களும் கொல்லப்பட்டதாக மேற்கத்தைய இராணுவ நிபுணர்கள் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. இந்திய அரசானது தனது இராணுவ பலத்தையும், தனது நவீன ஆயுத பலத்தையும், தனது போர்

நாடுகள் இராணுவ உதவிகளை அளித்து வந்திருப்பதை அவதானிக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எந்தவொரு வெளிநாட்டு உதவியும் கிடைக்கவில்லை. இந்திய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எமது இயக்கம் தனித்து நின்று போராடி. பிரமாண்டமான ஒரு இராணுவ இயந்திரத்தை தன்னந்தனியே எதிர்த்து நின்றது. இதுகச்

யில் அப்பாவிப் பொதுமக்களை இந்த ஆயுதக் குழுக்கள் மிருகத்தனமாகக் கொலை செய்தன. கொலைகளுடன் நின்றுவிடாது பொது மக்களை மிருகத்தனமாக அடித்துத் துன்புறுத்தல், வீடுகளில் புகுந்து கொள்ளையடித்தல், காரணமின்றி கைதுசெய்து காவலில் வைத்தல், இப்படியான அடாவடித்தனங்களிலும் இக்குக் குழுக்கள் இறங்கின. இது மட்டுமன்றி. இளம்பெண்களைக் கடத்திச் சென்று இந்திய இராணுவ அதிகாரிகளின் காமவெறிக்கு பலிகொடுத்து தமிழ் இனம் இதுவரை கண்டிராத மிகக் கேவலமான செயல்களிலும் இவர்கள் ஈடுபட்டனர்.

இந்த தமிழ் துரோக அராஜ செயல்களால் பெரு

**இக் கட்டுரை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு வெளியீட்டு வாரியத்தால் வெளியிடப்பட்டது.**

யுக்தி முறைகளையும் பிரயோகித்து முழு அளவிலான போரை நடத்திய போதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவக் கட்டமைப்பையும் கட்டுக்கோப்பையும் தகர்த்துவிட முடியவில்லை. போராட்டம் விரிவடைந்து தீவிரம் பெற்ற போதும் புலிகளின் இராணுவ அமைப்பு முன்னதைவிட பலம் வாய்ந்ததாக வலுவடைந்தது. இந்திய புலிகள் போர் காலவரையின்றி இழுபட்டு வந்தாலும் இந்திய படையெடுப்புகள் தோல்விகண்டதாலும், இந்திய தரப்பில் பெரும் உயிர்ச் சேதம் ஏற்பட்டுவந்ததாலும் இந்திய ஆக்கிரமிப்பு படைகளின் மனவுறுதி உடையத் தொடங்கியது. சாதாரண இந்திய சிப்பாய்களுக்கு விடுதலைப் புலிகள் சிம்மசொற்பனமாக விளங்கினர். நடுத்தர மட்டத்திலுள்ள இந்திய இராணுவ அதிகாரிகள் மத்தியிலும் சோர்வும் விரக்தியும் எழுந்தது. ஒரு சிலர் இந்த யுத்தத்தைபகிரங்கமாகக் கண்டித்ததுடன் புலிகளின் மனோ திடத்தையும் வீரத்தையும் பாராட்டவும் செய்தனர். மக்கள் ஆதரவு பெற்ற ஒரு விடுதலை இயக்கத்தை இராணுவ ரீதியாக அழிக்கமுயல்வது முட்டாள் தனமான அணுகுமுறையென சிலஇந்திய பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் டில்லி ஆட்சிபீடத்தை கண்டிக்கவும் தவறவில்லை. வல்லரசுகளின் வியட்னாம் ஆப்கானிஸ்தான் அனுபவங்களை சுட்டிக்காட்டி, ஒரு நிச்சயமற்ற நீண்ட கால போரில் இந்தியா மாட்டிக் கொள்ளப போகிறது எனவும் சில இந்திய பத்திரிகையா

முழு உலகத்திலுமே தனிச் சிறப்புடைய ஒரு இராணுவ சாதனையாகும். இன்னொரு வகையில் சொல்லப் போனால், உலகின் தலை சிறந்த கரந்தடி இயக்கம் என்ற மதிப்பை புலிகள் இயக்கம் பெற்றுள்ளதுடன் ஒரு மகத்தான உலக இராணுவ சாதனையையும் படைத்திருக்கிறது. இந்த உலக சாதனையை தமிழினத்திற்கு பெற்றுத் தந்த பெருமை எமது தலைவர் பிரபாகரனையே சாரும். எதற்கும் மனவுறுதி தளராது, அபார தன்னம்பிக்கையுடன், இயக்கத்தின் கட்டுப்பாட்டையும் கட்டுக்கோப்பையும் பலப்படுத்தி, ஒரு வியக்கத்தக்க கரந்தடிப் போராட்டத்தை தலைமை தாங்கி வழிநடத்தி இந்த மாபெரும் யுத்த சாதனையை பிரபாகரன் நிலைநாட்டினார்.

இராணுவ அணுகுமுறை தோல்வியடைவதையும், தனது படை வீரர்கள் மனவுறுதி தளர்வதையும் கண்டு பயந்த இந்திய அரசு புலிகள் இயக்கத்தை அரசியல் ரீதியாக அந்நியப்படுத்த திட்டமிட்டது. இத் திட்டத்தின் அடிப்படையில்தான் ஒரு போலியான மாகாணசபைத் தேர்தல் நாடகம் நடத்தி தனது கைக்கூலிகளாக செயற்பட்ட ஆயுதக் குழுக்களை இந்தியா அதிகார பீடம் ஏற்றியது. மாகாண சபை நிர்வாகத்தைப் பலப்படுத்தி தனது கொத்தடிமைகளாக ஈ. பி. ஆர். எல். எப், ஈ. பி. என். டி. எல். எப், டெலோ போன்ற காடையர் கோஷ்டிகளை இராணுவ ரீதியாகப் பலப்படுத்திவிட்டால்

மாளின் மாகாண நிர்வாகம் பாந்துபட்ட வெகுசனங்களிடமிருந்து அந்நியப்பட்டது. பெருமாளின் நிர்வாகத்தை இந்திய இராணுவ சர்வாதிகாரத்தின ஒரு அங்கமான விரிவாக்கமாகவே எமது மக்கள் கருதினர். எனவே, தனது எட்டப்பர் குழுக்களை தமிழீழ மக்களின் உண்மையான

விட்டது. இந்தக்கிளர்ச்சி வன்முறை வடிவத்தில் பூதாகரமாகவளர்ந்து புதிதாகப்பதவியேற்ற பிரேமதாஸா ஆட்சியை ஆட்டம் காணச்செய்தது

இந்திய இராணுவ பலமூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தையழித்து, தமிழீழமக்களின் தேசிய சுதந்திரப் போராட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கிலோய முந்திய ஜெயவர்த்தனா அரசு ராஜீவ் காந்தியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது என்பதை எமது மக்கள் அறிவார்கள். விடுதலைப் புலிகளோடு இந்திய இராணுவத்தை மோதவைத்தது ஒரு பெரிய ராஜ தந்திர வெற்றி என ஜெயவர்த்தனா அரசு எண்ணியது. இலங்கை இராணுவமானது இஸ்ரேலிய உளவுப் படையுடனும், பிரித்தானிய, தென்னாபிரிக்கக் கூலிப் படைகளுடனும், பாகிஸ்தானிய இராணுவ ஆலோசகர்களுடனும் சாதிக்க முடியாத ஒரு காரியத்தை இந்திய இராணுவப் பூதம் சாதித்து விடுமென ஜெயவர்த்தனா கனவு கண்டார். காலப்போக்கில் இந்தக் கனவு கலையத் தொடங்கியது. 72 மணி நேரத்தில் புலிகளை அழித்துவிடுவோமெனக் களத்தில் குதித்த இந்திய இராணுவம், நாட்கள் கிழமைகளாகி, கிழமைகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

---

# மதிய உணவில் ஏன் இந்த விந்தை?

பத்திரிகை ஆசிரியர்,
ஈழநாதம்

கதிஜா மகாவித்தியாலயத்தில் 15,17,18, 21-5-90 ஆகிய நாட்களில் மதிய உணவாக ஒரு மாணவிக்கு எட்டு (8) மலிபன் மாரி பிஸ்கட்டுகள் கொடுக்கப்பட்டது. மொத்தமாகக் கொள்முதல் செய்யும் போது 8 பிஸ்கட் 1 ரூபா

**மக்கள் மடல்**

60 சதம் முடிகிறது. ஒரு மாணவருக்கு 3/- ரூபா செலவிடுமாறு அரசு அனுமதியளித்துள்ளபோது ஏன இந்த விந்தை நடைபெற்றது.

23-03-90 வெள்ளிக்கிழமை ஆண்டு 11 க்கு மேற்பட்டோருக்கு 6 மலிபன் நைஸ் பிஸ்கட், ஆண்டு 8 - 10 வரை 5 மலிபன் நைஸ் பிஸ்கட், ஆண்டு 6 - 7 வரை 4 மலிபன் நைஸ் பிஸ்கட்டும் வழங்கப்பட்டது. சகல மாணவருக்கும் தலா 3/- ரூபா அரசு வழங்கும்போது ஏன் இந்த வேறுபாடு காட்டப்பட்டது?

சராசரி 5 மலிபன் நைஸ் பிஸ்கட் எனக் கணிப்பிட்டால் மொத்தக் கொள்வனவு விலைப்படி 2 ரூயா 25 சதம் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. ஏன் இந்த விந்தை நடைபெற்றது. இப்படி எத்தனை நாட்கள் நடைபெற்றுள்ளன? கல்வித் திணைக்களத்துக்கு மிச்சம் பிடித்துக் கொடுக்கிறார்களா?

மதிய உணவுக் குழுவில் பெற்றோர் சார்பாக உள்ள அங்கத்தவர் அக்குழுவிலிருந்து இராஜினாமாச் செய்துவிட்டார். பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டுமாறு, பெப்ரவரி மாதத்தில் கோரிக்கை விடுத்தும், செயலாளர் பலமுறை கூட்டம் கூட்டப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும், கூட்டத்தைக் கூட்டாது தவிர்ப்பது, ஏன் உடனடியாக பாடசாலை அபிவிருத்திச்சங்கக் கூட்டத்தைக் கூட்ட அதிபர் நடவடிக்கை எடுப்பாரா?

எஸ். எச். அஜ்மயீன்
யாழ்ப்பாணம்.

---

சுற்றுலாவுக்குப் புறப்பட்டுச் செல்கிறார்கள். பெற்றோர் வழியனுப்பி வைக்கிறார்கள்.

யாழ்ப்பாணம்-கொழும்பு போக்குவரத்துச் சேவையிலீடுபட்டிருந்த பல பஸ்கள் இப்போது ரயில் சேவைகள் நடைபெறுவதால் கொழும்புப் பயணத்தை நிறுத்தியுள்ளன. இப்படி இரண்டு பஸ்கள்தான நேற்றுப் பள்ளிக்கூடப்பிள்ளைகளைச் சுற்றுலாவுக்கு ஏற்றிச் சென்றன!

யாழ். நகரில் வேம்படி மகளிர் கல்லூரிச் சந்தியில் ஷெல் அடி குண்டு வீச்சுகளினால் வீதி சேதமடைந்து போக்குவரத்துச் செய்வது பெரும் சிரமமாக இருந்தது. இந்த இடத்தில் அடிக்கடி விபத்துக்களும் நடந்தன. கடந்த சில வருடங்களாக இந்த நிலை நீடித்து வந்தது. யாருமே அதைப்பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. இந்தியராணுவத்தின் ஜீப் வண்டிகள் கூட இப்பாதையில் வேகமாகச் சென்றதைப் பார்த்திருக்கிறேன்.

இப்பொழுது இந்த வீதியைத்திருத்தும் வேலைகள் ஆரம்பமாகியிருக்கின்றன ஆமை வேகத்தில் தா வேலைகள் நகர்கின்றன ப்போது முடிவடை மோ?

வீதிகள் திருத்தும் வேலைகளை இரவில் செய்தாலென்ன? இந்தியாவிலும் ற்றும் வெளிநாடுகளில் லெவற்றிலும் ஏன் கொழும்பில் கூட வீதிதிருத்துப் வேலைகள் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் இரவு வேளையில் தான் செய்யப்படுகின்றன. வீதி சுத்தமாக்கும் சுகாதார வேலைகளும் கூட இரவில் நடைபெறுகின்றன.

இங்கும் இதைச் செய்தாலென்ன?

## பரீட்சார்த்திகளின் நலனுக்காக பஸ்சேவை

(மூதூர்)

எதிர்வரும் க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி கிழக்கு பிராந்திய போக்குவரத்துச்சபை பஸ் சேவைகளை ஏற்படுத்தவுள்ளது.

ஈழநாதம்

அமைதிப்படைக்கு சென்னையில் அளித்த

# வரவேற்பில் கருணாநிதி கலந்துகொள்ளாதது ஏன்?


## தமிழர் கொலைக்கு பயன்பட்ட படை; மனச்சாட்சி இடமளிக்கவில்லை

(சென்னை)

இலங்கையில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கொலை செய்யப்படுவதற்கு இந்திய இராணுவம் பயன்படுத்தப்பட்டதால் திருக்கோணமலையிலிருந்து திரும்பிய இந்திய இராணுவத்துக்குச் சென்னையிலளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்து கொள்வதற்குத் தமது மனச்சாட்சி இடம்தரவில்லை என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கையில் பல தியாகங்களைப் புரிந்து விட்டுப் பெருமையோடு நாடுதிரும்பிய இந்திய அமைதிப்படைக்கு தமிழ் நாட்டு மக்கள் அளித்த வரவேற்பில் தமிழக முதலமைச்சர் கலந்து கொள்ளாதது தமிழரின் கலாசாரத்துக்குப் புறம்பானது, மாறானது என்று தமிழ் நாடு சட்ட சபை உறுப்பினரான குமாரி ஆனந்தன் குற்றம் சாட்டியிருந்தார். இதற்குப் பதிலளிக்கு முகமாகவே கலைஞர் கருணாநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய இராணுவத்துக்குத் தாம் எதிரானவனல்லவென்றும் இலங்கையில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் அநியாயமாகப்படுகொலை செய்யப்படுவதற்கு இந்திய இராணுவம் பயன்படுத்தப்பட்டபடியால் அவர்களுக்கு அளித்த வரவேற்பில் கலந்து கொள்ளத் தமது மனச் சாட்சி இடம் தரவில்லை என்று கலைஞர் தெரிவித்திருந்தார்.



### நினைவுக் கூட்டம்

(தீவுப்பகுதி)

உண்ணா விரதம் இருந்து உயிர் நீத்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை வேலணை துறையூர் ஐயனார் சன சமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. (15)

### இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் உள்ள பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தின் மேலதிக பதிவாளராக திரு. ஏ.பொன்னம்பலம் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. இராசையாவின் இடமாற்றத்தையடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் காணிப்பதிவு அலுவலகத்திலிருந்து இங்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

### 72 மணிநேரத்தில்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதங்களாகி, மாதங்கள் வரு

## வடக்கு கிழக்கு மாவட்ட ஆசிரியர்இடமாற்றம் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு. கிழக்கு மாகாண மாவட்டங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றங்களை இடைநிறுத்தி வைக்குமாறு மாகாண கல்வி, கலாசார. விளையாட்டுத்துறை அமைச்சின் பதில் செயலாளர் திரு. ஈ ஜே. சற்குணராசா (பணிப் ... முறைகளை உருவாக்கும். இதன்படியே ஆசிரிய இடமாற்றம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

### புலமைப்பரிசிலில் சமசந்தர்ப்பம்

### பொதுக்கூட்டம்

(தீவுப்பகுதி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் மாபெரும் பொதுக்கூட்டமொன்று எதிர் வரும் 31ம் திகதி (31 3.90) சனிக்கிழமை மண்டதீவு சிறுப்புலம் பொது மைதானத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களும், மண்டதீவு பிரமுகர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். (15)

### தொண்டர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களின் விபரம் திரட்டும் பொருட்டு 31.3 1990 அன்று காலை பத்து மணியளவில் குருநகர் சென் யேம்ஸ் வித்தியாலையத்தில் கூட்டம் ஒன்று கூட்டப்பட உள்ளது இதற்கு கடமையிலிருந்து விலக்கப்பட்ட, கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர். (லோ)

## "தமிழ்த்தேசிய இனத்தில்முஸ்லிம்கள் பிரிக்க முடியாத அம்சம்" - தாஷ் முகமட்

"தமிழ் தேசிய இனத்தில் முஸ்லிம்கள் பிரிக்கமுடியாத அம்சமாகிவிட்டனர். முஸ்லிம் காங்கிரஸ் தனது இனவாத அணுகுமுறையை கைவிட வேண்டும். இவ்விதமான அணுகுமுறையின் மூலம் முஸ்லிம் மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை"

யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மக்கள் விடுதலை முன்னணி பொதுக்கூட்டத்தில் முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆசிரியர் தாஜ் முகமட் அவர்கள் உரையாற்றும் பொழுது குறிப்பிட்டார்.

இக் கூட்டம் யாழ். முஸ்லிம் வட்டார மக்களின் ஆதரவுடன் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இக் கூட்டத்தில் வலிகாமம் பிரிவு விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், விடுதலைப்புலிகள் முஸ்லிம் வட்டாரப் பொறுப்பாளர் சிட்டு, தி. இராசநாயகம், பொன் பூலோகசிங்கம், செல்வி. பாரதி ஏ. சி. இக்பால், எம். ஏ. நூர் மொகமமது ஆகியோர் உட்பட பலர் பங்கு பற்றினர்.

திரு. தாஜ் முகமட் அவர்கள் மேலும் கூறியதாவது:-

"முஸ்லிம் காங்கிரஸ் இனவாதம் பேசி முஸ்லிம் மக்களை மூழ்கடிக்கும் கட்சியாக உள்ளது. வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் ஈழத்தில் வாழும் தமிழ்-முஸ்லிம் மக்களின் நலன்களுக்கு குந்தகமான நடவடிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் கையாளுகிறது. சிங்களக் கட்சிகள் கூட ஆதரவளிக்கும் ஆறாவது சட்ட மசோதாவை அற்றுவதை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கிறது எமக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது

தமிழ் முஸ்லிம்கள் இணைந்த தமிழ் தேசிய இனத்தின் சக்தியை எவராலும் பிரிக்கமுடியாது. தமிழ் முஸ்லிம்களின் ஒருங்கிணைந்த பிரச்சினைகளை நாம் ஒன்றுபட்டு விடுதலைப் புலிகளின் மூலம் மாத்திரம் வென்றெடுக்க முடியும் என்பதை சரித்திரம் நிரூபித்து விட்டது"

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் வலிகாமம் பிரிவு பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் பேசும்பொழுது கூறியதாவது.

"இலங்கை அரசின் அடக்குமுறைக்கும் இந்தியப்படையின் அடக்குமுறைக்கும் தமிழர்களும், முஸ்லிம்களும் உள்ளடங்கினர். இதனால் விடுதலைப் போராட்டத்தை தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்தே நடத்தினர்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆரம்பக்காலம் தொட்டே தமிழர்களுடன் இணைந்து முஸ்லிம்களும் பல தியாகங்களை செய்துள்ளனர். தமிழர்களும் முஸ்லிம்களும் மதத்தால் வேறுபட்டாலும் இனத்தால் நாம் எல்லோரும் தமிழர்களே ஆகவே எமது உரிமை போராட்டத்தில் எமது இணைந்த பங்கு தொடர வேண்டும்."

## மானிப்பாய்ப் பகுதி மக்களுக்கு நிவாரணம்!

(யாழ்ப்பாணம்)

நவாலி கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 1364 குடும்பங்களுக்கு 01-04-90 அன்றும் ஆனைக்கோட்டை கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 1077 குடும்பங்களுக்கு 07-04 90 அன்றும் உயரப்புலம் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 938 குடும்பங்களுக்கு 08-04-90 அன்றும் இரண்டாம் கட்ட 1000 ரூபா வழங்கப்படவுள்ளன. மானிப்பாய் கிளையில் நிவாரணக் கொடுப்பனவு இல்லாத காரணத்தினால் மேற்படி நிவாரணம் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

### ஆயுதம் ஒப்ப....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது மக்களின் பாதுகாப்புக்காகவும் எமது சுதந்திரத்தை அடைவதற்காகவும் நாம் ஆயுதம் ஏந்தினோம். இந் நிலையில் ஆயுதங்களை ஒப்படைப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரத்தினம்

தமிழ்பேசும் மக்களுக்குத் தமிழ்ப் பேசும் மக்கள்தான் பாதுகாப்பு வழங்கமுடியும், இதை வேறுயாரும் வழங்க முடியாது. என்றும் திரு. யோகரத்தினம் மேலும் சொன்னார்.

யோகி நேற்று ஒட்டுசுட்டானில நடந்த நினைவுத் தூபி திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

### இந்தியா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குமாறு பாரதம் இலங்கையிடம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ.கே. குஜரால் நேற்று இராச சபாவில் தெரிவித்தார்.


இந்த அகதிகள் சட்டத்தை மதித்து நடக்குமாறு பார்த்துக் கொள்வதற்காக, ...

பருத்தித்துறை

## இலங்கை வங்கிக் கிளையில் இரண்டாம் கட்ட நிவாரணம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் நாளை வெள்ளிக்கிழமை (30-3-90) ஞாயிற்றுக்கிழமை (1-4-90) ஆகிய இரு தினங்களுக்கு இரண்டாம் கட்ட நிவாரணம் கொடுக்கப்படவுள்ளன. வெள்ளிக்கிழமை அன்று பொலிகண்டி மேற்கு கிராம சேவகர் பிரிவைச்சேர்ந்த 752 குடும்பங்களும், கெருடாவில்வடக்கு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 526 குடும்பங்களும், வல்லிபுரம் கிராம சேவகர் பிரிவைச்சேர்ந்த 18 குடும்பங்களும் நிவாரணங்களைப் பெறவுள்ளன. 01-4-90 ஞாயிற்றுக்கிழமை அன்று பருத்தித்துறை கிராம சேவகர் பிரிவைச்சேர்ந்த 1300 குடும்பங்கள் நிவாரணங்களைப் பெறவுள்ளன.



நேற்றுப் பலாலியில் நடந்த பேச்சுவார்த்தையில் அமைச்சர் ஹமீதும் அரச தரப்பு பிரதிநிதியும் இப்படிக் காணப்பட்ட

ஐயனார் சன சமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. (15)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் உள்ள பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தின் மேலதிக பதிவாளராக திரு. ஏ.பொன்னம்பலம் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. இராசையாவின் இடமாற்றத்தையடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் காணிப்பதிவு அலுவலகத்திலிருந்து இங்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

## 72 மணிநேரத்தில்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகியும் விடுதலைப் புலிகளைச் சமாளிக்க முடியாது திண்டாடியமை இலங்கை அரசுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. இந்திய இராணுவத்தின் போர்த் திறமையில் இலங்கை அரசுக்கு நம்பிக்கை தளர்ந்தது. புலிகளுக்கு எதிரான போரைச் சாட்டாக வைத்து, இந்திய இராணுவம் இலங்கையில் நிரந்தரமாகக் காலூன்றிவிடலாமென்ற சந்தேகமும் எழுந்தது. அத்துடன் ஜே வி. பி இயக்கத்தின் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரமும், வன்முறை கிளர்ச்சிகளும் இலங்கையரசுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் தனது நோக்குகளைஅடைவதில் படுதோல்வியைக் கண்டது. பதிலுக்கு, வட - கிழக்கில் ஒரு முழு அளவிலான போரையும், தென்னிலங்கையில் வன்முறையையும், கிளர்ச்சியையும் உண்டு பண்ணியதால் முழு இலங்கையுமே என்றுமில்லாதபடி பெரும் அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு ஆளானது. இந்திய - இலங்கை ஒப்பந்தமும், இந்திய இராணுவத் தலையீடுமே இந்த நெருக்கடிக்குக் காரணமென உணரப்பட்டதால் இந்தியஇராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறி விட வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்; முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தியில் மேலோங்கியது. அமைதிப் படை வேடத்தில் இலங்கையில் காலூன்றி இருப்பது ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் என்பதை சகல இனத்தோரும் உணரத்தொடங்கினர். இந்த அரசியல் சூழ்நிலையில் தான் இந்திய இராணுவத்தை வெளியேற்றும் மனுப்பெற்று பிரேமதாஸா ஆட்சிபீடம் ஏறினார்.

(தொடரும்)

றும் இலங்கையில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் அநியாயமாகப்படுகொலை செய்யப்படுவதற்கு இந்திய இராணுவம் பயன்படுத்தப்பட்டபடியால் அவர்களுக்கு அளித்த வரவேற்பில்



கலந்து கொள்ளத் தமது மனச் சாட்சி இடம் தரவில்லை என்று கலைஞர் தெரிவித்திருந்தார்.

# வடக்கு கிழக்கு மாவட்ட ஆசிரியர்இடமாற்றம் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு. கிழக்கு மாகாண மாவட்டங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றங்களை இடைநிறுத்தி வைக்குமாறு மாகாண கல்வி, கலாசார. விளையாட்டுத்துறை அமைச்சின் பதில் செயலாளர் திரு. ஈ ஜே. சற்குணராசா பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாண இடமாற்ற ஆலோசனைச் சபையின் முடிவுகளுக்கு அமையவே இனிமேல் ஆசிரியர் இடமாற்றங்களை மேற்கொள்வதென அமைச்சு தீர்மானித்துள்ளது.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இடமாற்ற ஆலோசனைச் சபையின் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கல்வித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரும்ஆசிரியர்தொழிற் சங்கங்களது ஒவ்வொரு பிரதிநிதியும் இடம் பெறுவார்கள் என மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி சபை இடமாற்றம் தொடர்பாக கொள்கை விதிமுறைகளை உருவாக்கும். இதன்படியே ஆசிரிய இடமாற்றம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

## வீடற்றோருக்கு....

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

பெற்றுள்ளதாகவும் இவற்றை அந்தந்த மாநகர சபை அலுவலகங்கள்மூலமாகவும், கிராமப்பகுதிகளில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் ஊடாகவும் அறிவிக்கப்படுக் எனவும் கூறினார்.

## ஆங்கிலத்தில்.,.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும், இம்முறை ஆங்கில பாடத்தில் சித்தியடைந்தோரின் தொகை கடந்த வருடத்தை விட நான்கு வீதத்தால் குறைந்துள்ளது,

கடந்த ஆண்டு 29·2 வீத மாணவர்கள் ஆங்கில பாடத்தில் சித்திபெற்றனர். இவ்வாண்டு இது 25 வீதமாக குறைந்துள்ளது,

## புலமைப்பரிசிலில் சமசந்தர்ப்பம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் பெறுவதற்கும் சமசந்தர்ப்பம் அளிக்கப்படும் என கல்வி கலாசார அமைச்சர் லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் வழங்குவதில் அரசாங்கம் எதுவித பாகுபாடும் காண்பிக்காது என்று அமைச்சர் தெரிவித்தார்.

புலமைப் பரிசில் பெறுவதால் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண முடிகிறது. புலமைப் பரிசில் பெறாத மாணவர்கள் விரக்தியடைந்து, கல்வியில் ஆர்வம் குன்றிக் காணப்படுகின்றனர். இதனை நீக்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

## விஜயபால....

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய மாறுதல்கள் ஏற்படுமென எதிர்பார்ப்பதற்கில்லை என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காமினி திஸ்ஸநாயக்காவுக்கும் லலித் அத்துலத் முதலிக்கும் திருப்தி அளிக்கக் கூடியதாக அமைச்சரவை மாற்றங்கள் அமைந்திருக்க மாட்டாதென்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப் படுகிறது.

## ஈழவர் முன்னணி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டவருமான திரு. இ. இரத்தினசபாபதி தமது எம். பி. பதவியை ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்தே திரு. தில்லைநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அடைவதற்காகவும் நாம் ஆயுதம் ஏந்தினோம். இந் நிலையில் ஆயுதங்களை ஒப்படைப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரத்தினம் தமிழ்பேசும் மக்களுக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் தான்

## இந்தியா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குமாறு பாரதம் இலங்கையிடம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ.கே. குஜரால் நேற்று இராச சபாவில் தெரிவித்தார்.

இந்த அகதிகள் சட்டத்தை மதித்து நடக்குமாறு பார்த்துக் கொள்வதற்காக, ஒரிஸ்ஸாவிலுள்ள அகதி முகாம்கள் அமைப்பிலும் உரிய பந்தோபஸ்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இந்த முகாம்களில் இப் பொழுது தங்கி வரும் அகதிகள் சட்டவிரோதமான செயல்கள் எதிலும் இறங்காமல் தடுப்பதற்காக உரிய நடவடிக்கைகளை அழுத்தமாக்குமாறு மாநில அரசு கேட்டுக் கொண்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இலங்கையின் வடகிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் திரு. வரதராசப் பெருமாள் பாரதத்திலும் இல்லை என்றும் திரு குஜரால் தெரிவித்தார்.

## யாழ் மாநகரசபை.-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி;

வும் திட்டங்கள் தீட்டப்பட்டு வருவதாகவும் யாழ்.வைத்திய சாலையைச் சுற்றி விரைவில் அமைதிப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படுவதுடன் உரத்த ஒலி எழுப்பும் ஸ்தாபனங்களுடன் விரைவில் தாம் சந்தித்துப் பேச இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேபோல் யாழ். நூலகம் புனர்நிர்மாணம் செய்வது சம்பந்தமாகவும் சுப்பிரமணியம் பூங்கா வெளிநாட்டு ஆலோசகர்களின் உதவியுடன் திருத்தி அமைக்கப்படுவது சம்பந்தமாகவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டங்கள் அனைத்தும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் சில சமூகசேவையாளர் தம்மைநாடி அடிக்கடி வேண்டிக்கொண்டமைக்கும் இணங்க தாம் யாழ். மாநகரை திருத்தி அமைக்க தீர்மானித்ததாக அவர் தெரிவித்தார்.


(லோ)

னார்.

யோகி நேற்று ஒட்டுசுட்டானில நடந்த நினைவுத் தூபி திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஆகிய இரு தினங்களுக்கு இரண்டாம் கட்ட நிவாரணம் கொடுக்கப்படவுள்ளன. வெள்ளிக்கிழமை அன்று பொலிகண்டி மேற்கு கிராம சேவகர் பிரிவைச்சேர்ந்த 752 குடும்

களும் நிவாரணங்களைப் பெறவுள்ளன. 01-4-90 ஞாயிற்றுக்கிழமை அன்று பருத்தித்துறை கிராம சேவகர் பிரிவைச்சேர்ந்த 1300 குடும்பங்கள் நிவாரணங்களைப் பெறவுள்ளன.



நேற்றுப் பலாலியில் நடந்த பேச்சுவார்த்தையில் அமைச்சர் ஹமீதும் அரச தரப்பு பிரதிநிதியும் இப்படிக் காணப்பட்டனர்.

## ஹமீத்-புலிகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# காரைநகர் கடற்படை விஸ்தரிப்பு நிறுத்தம்; நிவாரணம் வழங்கப்படும்

காரைநகர் கடற்படை விஸ்தரிப்பு பற்றியும் அதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டது பற்றியும் விடுதலைப்புலிகள் தரப்பில் எடுத்துச் சொல்லப்பட்டது.

கடற்படைத் தளத்தை விஸ்தரிப்பதைத் தற்காலிகமாக நிறுத்துவதென்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதென்றும் இலங்கை அரச தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

# தளங்கள் விஸ்தரிப்பு நோக்கம் இல்லை விமானநிலையம் விஸ்தரிப்பு

பலாலி இராணுவமுகாம் விஸ்தரிப்புப் பற்றியும் அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் பற்றியும் விடுதலைப் புலிகள் எடுத்து விளக்கிக் கூறினர்.

பலாலி விமான நிலையம் சர்வதேச அந்தஸ்துக்கு உயர்த்தப்பட வேண்டுமென்றும் இது தேசிய அபிவிருத்திக்கு உதவியாக இருக்குமென்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# ஆயுதப்படையின் எண்ணிக்கை அதிகரிக்காது

கடற்படை, விமானத் தளங்களையோ, இராணுவத்தளங்களையோ விஸ்தரிக்கும் நோக்கம் அரசுக்கு இல்லையென்றும் விமான நிலைய விஸ்தரிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறிப்பாக விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படுமென்றும் அரச தரப்பில் உறுதியளிக்கப்பட்டது,

கடற்படை விமானப்படை, இராணுவ முகாம்களை விஸ்தரிப்பதில்லை என்றும் யாழ். குடாநாட்டில் ஆயுதப்படைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதில்லையென்றும் இப் பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு காணப்பட்டது.

## சிறிய முகாம்கள் மூடப்படும்

யாழ் மாவட்டத்திலுள்ள சிறிய இராணுவ முகாம்களை மூடுவதென்றும் வல்வெட்டித்துறை இராணுவ முகாம் நாற்பத்தெட்டு மணிநேரத்தில் மூடப்படுமென்றும் இப் பேச்சுவார்த்தையில் அரச தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

முன்னர் போல் பலாலியிலும் யாழ் கோட்டையிலும் இராணுவம் தொடர்ந்திருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஆயுதங்கள் பற்றி பேசாமல் மக்கள் பாதுகாப்புபற்றி பேசட்டும்

''ஆயுதம் மக்களுடைய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட முக்கிய விஷயம் நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வு ஏற்பட்டு எமது மக்களின் பாதுகாப்பு பரிபூரணமாக ஒழுங்கு படுத்தப்படும்வரை ஆயுத கையளிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. இலங்கை அரசாங்கம் ஆயுதங்கள் பற்றிப் பேசுவதைவிட்டு எமது பாதுகாப்பு பற்றி எம்முடன் பேசவேண்டும்'' என்று கலாநிதி பாலசிங்கம் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது